தின பூமி
thinaboomi.com

பூமி: 31 சுற்று: 187 ஆனி 15 | RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, ஞாயிறு, ஜூன் 29, 2025 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி | பக்கம் 8 | ₹3.00



## ஈரானின் உச்ச தலைவர் கமேனியை காப்பாற்றியது நான்தான்: அதிபர் ட்ரம்ப்

...2-ம் பக்கம்

## சிறு, குறு நிறுவனங்களின் புகாருக்கு விரைவில் தீர்வு: ஜனாதிபதி முர்மு பேச்சு

...3-ம் பக்கம்

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் முதல் 2 இடங்களில் ஆஸி, இங்கி.

...6-ம் பக்கம்





● தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று முகாம் அலுவலகத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு - உறுப்பினர் சேர்க்கை' குறித்து மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, பாராளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி, இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்டச் செயலாளர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 'ஓரணியில் தமிழ்நாடு' பிரசார பயணம்:

# ஜூலை 1 முதல் தொடங்குகிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்

### தங்களை இணைத்துக்கொள்ள தொண்டர்களுக்கு அழைப்பு

சென்னை, ஜூன் 29-

**ஜூலை 1 முதல் ஓரணியில் தமிழ்நாடு என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்ட பிரசார பயணத்தை தொடங்கவுள்ளதாக தி.மு.க. தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். திரளாக பங்கேற்கு தங்களை இணைத்துக் கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.**

**மாவட்டங்கள்தோறும்...**

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:- நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல். எல்லார்க்கும் எல்லாம் என்கிற திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டங்கள் எல்லா மக்களுக்கும் சென்று சேர்கிறதா என்பதை நேரில் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்டங்கள்தோறும் ஆய்வுக் கூட்டங்களை உங்களில் ஒருவனான நான் மேற்கொண்டு வருகிறேன்.

இரண்டு நாட்களாக வேலூர் - திருப்பத்தூர் மாவட்டங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு திரும்பிய நிலையில், அன்பு உடன்பிறப்புகளாம் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

**'உடன்பிறப்பே வா' எனும்**

உங்களில் ஒருவனான நான் பாராட்டுகளில் மட்டும் மயங்கிடாமல், விமர்சனங்களையும் வரவேற்கிறேன். அந்த விமர்சனங்களில் உண்மை இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். நேர்மையான விமர்சனங்களைக் கவனித்துச் சரிப்படுத்த வேண்டிய செயல்களை மேற்கொள்வது என் வழக்கம். காழ்ப்புணர்வின் காரணமாக விமர்சனம் என்ற பெயரில் முன்வைக்கப்படும் அவதூறுகளைப் புறந்தள்ளிவிடுவதே என் பழக்கம். பொதுமக்களுக்கான அரசாகத் திராவிட மாடல் அரசு திகழ்ந்து வரும் நிலையில், இப்படியொரு அரசு அமைந்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பத்தாண்டுகளாகப் பாடுபட்ட கழகத் தொண்டர்களின் அளப்பரிய உழைப்பே, உங்களில் ஒருவனான நான் முதல்வர் பொறுப்பை ஏற்பதற்கு அடிப்படையாக அமைந்தது என்பதை ஒருபோதும் மறந்ததில்லை.

மக்களின் கோரிக்கைகளைக் கேட்பது போல. கழகத்தினரின் மனக்குரலை அறிந்துகொள்வதற்காகத்தான் அறிவாலயத்தில், 'உடன்பிறப்பே வா' எனும் தொகுதிவாரியான நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற்று வருகிறது.

**'ஓரணியில் தமிழ்நாடு'**

மக்களுக்கான திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும் 2026-ம் ஆண்டிலும் வெற்றிகரமாகத் தொடர்ந்திட ஜூலை 1 முதல் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்துடனான மாபெரும் பரப்புரைப் பயணத்தை உங்களில் ஒருவனான நான் தொடங்கி வைக்கிறேன். தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் புறக்கணித்து, தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணைபோகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுக்கப்படுகிறது.

**234 தொகுதிகளிலும்**

இதற்கான செயலியை அறிமுகம் செய்து, 234 தொகுதிகளிலும் அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஜூன் 25 அன்று அண்ணா அறிவாலயத்தில் சிறப்பான முறையில் பயிலரங்கை நடத்தியிருக்கிறார். இதில் பயிற்சி பெற்றுள்ள தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள், 234 தொகுதிகளிலும் உள்ள 68 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்டுள்ள கழகத்தின் இளம் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்து, மாவட்ட ஒன்றிய நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள் வழிகாட்டுதலுடன் அவரவர் வாக்குச்சாவடிக்குப்பட்ட வீடு வீடாகச் சென்று, மக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் அரசின் திட்டங்களால் அந்தக் குடும்பம் பெற்றுள்ள பயன்களை உறுதி செய்து. ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைக்கும் பணியை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

**நிறைவேற்றுவது குறித்து**

மாநிலக் கட்சியான

(கடைசி பக்கம் பார்க்க)

### மேட்டூர் அணையில் உபரி நீர் திறப்பு அதிகரிப்பு:

# காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

மேட்டூர், ஜூன் 29-

**மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் எந்த நேரத்திலும் 75 ஆயிரம் கன அடி உபரி நீர் திறக்கப்பட உள்ளதால், 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்து மேட்டூர் அணை உதவி செயற்பொறியாளர் செல்வராஜ் உத்தரவிட்டுள்ளார்.**

கேரளா, கர்நாடகாவில் பெய்து வரும் கனமழை காரணமாக அங்குள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கபினி, கே.ஆர்.எஸ். அணைகளின் பாதுகாப்பு கருதி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் காவிரில் கடந்த 2 வாரங்களாக நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மேட்டூர் அணைக்கு விநாடிக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் மாலை 60,740 கன அடியாக இருந்த நிலையில், நேற்று காலை 8 மணி விநாடிக்கு நீர்வரத்து 73,452 கன அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் காலை 4 மணிக்கு 114 அடியாக இருந்த நிலையில், நேற்று காலை 8 மணிக்கு 116.89 அடியாக உயர்ந்ததுள்ளது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 26,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவான 120 அடியை விரைவில் எட்ட வாய்ப்புள்ளது. இது குறித்து மேட்டூர் அணை உதவி செயற்பொறியாளர் செல்வராஜ் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பி உள்ள கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், மதியம் 12 மணி நிலவரப்படி அணை நீர்மட்டம் 117.39 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் நீர்மட்டம் விரைவில் முழு கொள்ளளவான 120 அடியை எட்டவுள்ளது. எந்த நேரத்திலும் உபரி நீர் காவிரி ஆற்றில் விநாடிக்கு நீர்வரத்து 50,000 கன அடி முதல் 75,000 கன அடி வரை திறந்து விடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, காவிரி கரையோரம் வசிக்கும் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் 11 மாவட்ட மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு செல்ல வேண்டும். உடைமைகளின் பாதுகாப்பு மற்றும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

### 'இனி 2 ஹெல்மெட்டுகள் கட்டாயம்'

# மோட்டார் வாகன விதிகளை திருத்த மத்திய அரசு முடிவு

புதுடெல்லி, ஜூன் 29-

**புதிய இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு, வாகன உற்பத்தியாளர்கள் 2 ஹெல்மெட்டுகள் கட்டாயம் வழங்க மோட்டார் வாகன விதிகளை திருத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.**

புதிய இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு, வாகன உற்பத்தியாளர்கள் இரண்டு ஹெல்மெட்டுகளை வழங்குவதை கட்டாயமாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதுபோல ஆன்டி-லாக் பிரேக்கிங் சிஸ்டத்தை கட்டாயமாக்கவும் முடிவு செய்துள்ளது. இந்த புதிய விதியை நடைமுறைப்படுத்த மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் முக்கிய மாற்றங்களை செய்ய மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

கடந்த ஜூன் 23 அன்று மத்திய அரசு வெளியிட்ட வரைவு அறிவிப்பின்படி, 'புதிய விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர், இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு இருசக்கர வாகன உற்பத்தியாளர் இந்திய தரநிலைகள் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட தரத்துடன் 2 தலைக்கவசங்களை வழங்க வேண்டும்.

வழங்கப்படும் தலைக்கவசங்கள் இந்திய தரநிலைகள் ஆணையம் நிர்ணயித்த தரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். இருப்பினும், மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 129 இன் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நபர்களுக்கு இந்தத் தேவை பொருந்தாது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனவரி 1, 2026 முதல், 50சிசி க்கு மேல் எஞ்சின் திறன் அல்லது மணிக்கு 50 கிமீ வேகத்திற்கு மேல் உள்ள மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் உள்ளிட்ட அனைத்து புதிய எல்2 வகை இரு சக்கர வாகனங்களிலும் ஆன்டி-லாக் பிரேக்கிங் சிஸ்டம் பொருத்தப்படுவதை கட்டாயமாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

ஆன்டி-லாக் பிரேக்கிங் சிஸ்டம் இந்திய தரநிலை IS14664:2010 உடன் இருக்க வேண்டும்.

இந்த ஏபிஎஸ் பாதுகாப்பு அமைப்பானது வாகனத்தின் திடீர் பிரேக்கிங்கின் போது சறுக்குவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது. மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் முன்மொழியப்பட்ட இந்த புதிய விதிகள் குறித்து பொதுமக்கள் தங்கள் பரிந்துரைகள் மற்றும் ஆட்சேபனைகளை அனுப்ப 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகளை comments-morth@gov.in என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயத்திற்கான நீருக்கு வரி விதிக்க திட்டமா..?

### மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூன் 29-

**விவசாயத்திற்கான நீருக்கு வரி விதிக்கப்படவுள்ளதாக வெளியான தகவலுக்கு மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. விவசாயிகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் தகவல்களை வெளியிட வேண்டாம் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

நிலத்தடி நீர் வீணாக்கப்படுவதைத் தவிர்க்க, விவசாய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நீருக்கு மத்திய அரசு வரி விதிக்க திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. இது விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நிலத்தடியில் இருந்து உறிஞ்சப்படும் மொத்த தண்ணீரில் 23,913 கோடி கன மீட்டர் தண்ணீர் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இது மொத்த நிலத்தடி தண்ணீர் பயன்பாட்டு அளவில் 83 சதவீதமாக இருக்கிறது. தண்ணீர் அதிக அளவில் உறிஞ்சப்படுவதை தடுக்கும் வகையில், மாநில அரசுகளுடன் இணைந்து பல்வேறு மாநிலங்களில் 22 புதிய திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்த இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், மேற்கூறிய தகவலை மத்திய அரசு மறுத்துள்ளது. இது தொடர்பாக மத்திய அரசு கூறியிருப்பதாவது: விவசாயிகள் பயன்படுத்தும் நீருக்கு வரி விதிக்கப்படுவதாக வெளியாகும் தகவலில் உண்மையில்லை. நீருக்கு வரி விதிப்பது தொடர்பாக மத்திய அரசு எந்த அறிவுறுத்தலும் வழங்கவில்லை. மத்திய நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர் பாட்டில் ஏற்கனவே விரிவான விளக்கம் அளித்துவிட்டார். விவசாயிகள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் இதுபோன்ற தகவல்களை வெளியிட வேண்டாம். வெளிப்படைத்தன்மை கருதியும் தவறான தகவல் பரப்படுவதை தடுக்கவும் இந்த விளக்கம் அளிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எம்.எல்.ஏ. அமுல் கந்தசாமி மறைவு:

# வால்பாறை தொகுதி காலியானதாக சட்டப்பேரவை செயலகம் அறிவிப்பு

சென்னை, ஜூன் 29-

**எம்.எல்.ஏ. அமுல் கந்தசாமி மறைவை அடுத்து வால்பாறை தொகுதியை காலியானதான தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகம் அறிவித்துள்ளது.**

கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ.வாக அ.தி.மு.க.வைச் சேர்ந்த அமுல் கந்தசாமி இருந்து வந்தார். இந்த நிலையில் இவர் கடந்த 21-ந் தேதி உடல்நலக்குறைவால் மரணம் அடைந்தார். இந்த நிலையில் வால்பாறை தொகுதியை காலியானதான தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகம் அறிவித்துள்ளது. பொதுவாக, ஒரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால், அதில் இருந்து 6 மாத காலத்துக்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற தேர்தல் ஆணைய விதி உள்ளது.

ஆனால், தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இன்னும் 9 மாத காலமே இருப்பதால், வால்பாறை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த வாய்ப்பு இல்லை என்று இந்திய தேர்தல் ஆணையம் ஏற்கனவே தெரிவித்துவிட்டது. எனவே, அதுவரை எம்.எல்.ஏ. இல்லாத தொகுதியாகவே வால்பாறை இருக்கும்.

# வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் திட்டம்

### 10 மாவட்டங்களில் தொடங்க அரசு முடிவு

சென்னை, ஜூன் 29-

**வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம் சென்னை உட்பட 10 மாவட்டங்களில் தொடங்கப்பட உள்ளது.**

பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் ரேஷன் கடைகளில் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில், பருப்பு உள்ளிட்ட பொருட்கள் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழகத்தில் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம் சென்னை உட்பட 10 மாவட்டங்களில் தொடங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தை சோதனை ரீதியாக தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் வீடுகளில் நேரடியாக ரேஷன் பொருட்களை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சோதனை ஜூலை 1ம் தேதி முதல் 5ம் தேதி வரை நடத்தப்பட உள்ளதாக கூட்டுறவு மற்றும் உணவு துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு

### வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜூன் 29-

**தமிழகத்தில் 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**


சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று முதல் ஜூலை 3-ம் தேதி வரையில் தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய சேலானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் வெப்பநிலை உயரக்கூடும் ஓரிரு இடங்களில் வெப்பநிலை உயரக்கூடும். அதிகபட்சமாக நேற்று மதுரை விமான நிலையம் மற்றும் தஞ்சாவூரில் தலா 100.4 டிகிரி வெயில் பதிவானது.நேற்று காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில், கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் 12 செ.மீட்டர், நீலகிரி, கன்னியாகுமரியில் தலா 11 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 303.03 | 88.80 |
| பாயிண்ட் 84,058.90 | பாயிண்ட் 25,637.80 |



**தங்கம்**
1 சவரன் ₹71,440
1 கிராம் ₹8,930



**வெள்ளி**
1 கிலோ ₹119,000
1 கிராம் ₹119.00

**டாலர்** ₹85.49

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### ஈரான் உச்ச தலைவர்
# கமேனியை காப்பாற்றியது நான்தான்: அதிபர் ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூன் 29-**

ஈரான் உச்ச தலைவர் கமேனியை படுகொலையில் இருநது காப்பாற்றினேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறினார்.



இஸ்ரேல், ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதனிடையே, கடந்த *13*ம் தேதி அதிகாலை ஈரானில் உள்ள அணு ஆராய்ச்சி மையங்கள், அணு உலைகள், ஏவுகணை சேமிப்பு கிடங்குகள், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் உள்பட பல்வேறு இடங்களை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை தடுக்கவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது. அதேவேளை, மோதலில் இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஈரானின் *3* அணு உலைகள் மீது அமெரிக்கா *21*ம் தேதி அதிரடி தாக்குதல் நடத்தியது. இதனை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் அமெரிக்க ராணுவ நிலைகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியது. *12* நாட்கள் நடந்த மோதல் *24*ம் தேதி முடிவுக்கு வந்தது. இதனிடையே, இந்த போருக்குப்பின் முதல் முறையாக ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா கமேனி நாட்டு மக்களிடையே உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், போரில் வெற்றிபெற்றுவிட்டோம். போரில் அமெரிக்காவின் முகத்திலேயே அறைந்தோம். கத்தாரில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளத்தை தாக்கினோம்' என்றார்.

இந்நிலையில், போரில் வெற்றிபெற்றுவிட்டோம் என்று ஈரான் உச்ச தலைவர் கமேனி கூறிய நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், போரின்போது அயதுல்லா கமேனி எங்கு பதுங்கி இருந்தார் என்பது எனக்கு தெரியும். அவர் இஸ்ரேலால் படுகொலை செய்யப்படுவதில் இருந்து காப்பாற்றினேன். கடந்த சில நாட்களாக ஈரான் மீதான பொருளாதாரத்தடைகளை நீக்குவது குறித்து ஆலோசித்தேன். ஆனால், கமேனியின் கோபம், வெறுப்பு பேச்சு ஆகியவற்றால் பொருளாதாரத்தடைகளை நீக்கும் முடிவில் இருந்து பின்வாங்கிவிட்டேன்' என தெரிவித்துள்ளார்.

# இன்னும் ஒரு வாரத்தில் காசாவில் போர் நிறுத்தம்
### அதிபர் ட்ரம்ப் நம்பிக்கை

**வாஷிங்டன், ஜூன் 29-**

காசாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான மோதலில் ஒரு வாரத்திற்குள் போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று நம்புவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

காங்கோ-ருவாண்டா ஒப்பந்தத்தைக் கொண்டாடும் ஓவல் அலுவலக நிகழ்வில், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர்நிறுத்தம் நெருங்கிவிட்டதாக தான் நம்புவதாக ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார். இது குறித்து வெள்ளை மாளிகையில் அவர் பேசுகையில், "இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் நெருங்கிவிட்டது என்று நினைக்கிறேன். சம்பந்தப்பட்ட சிலரிடம் நான் இப்போதுதான் பேசினேன். அடுத்த வாரத்துக்குள் போர் நிறுத்தம் ஏற்படும் என்று நாங்கள் நினைக்கிறோம்" என்றார். ஆனால், போர் நிறுத்தம் குறித்து யாரிடம் பேசி வருகிறோம் என்ற தகவலை ட்ரம்ப் வெளியிடவில்லை.

இஸ்ரேல் உடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தத்தில் தங்கள் வசமுள்ள பணயக்கைதிகளை விடுவிக்கத் தயாராக இருப்பதாக ஹமாஸ் கூறியுள்ளது. ஆனால், ஹமாஸ் ஆயுதங்களை முழுமையாக கைவிட்டால் மட்டுமே போரை முடிவுக்கு கொண்டுவருவோம் என்று இஸ்ரேல் தெரிவித்தது. இருப்பினும் ஆயுதங்களை கைவிட முடியாது என ஹமாஸ் மறுத்து வருகிறது.

*2023* அக்டோபர் *7* அன்று ஹமாஸ் இஸ்ரேலைத் தாக்கி *1,200* பேரைக் கொன்று, *251* பணயக்கைதிகளை பிடித்துச் சென்றதால் காசாவில் போர் தொடங்கியது. *2023* அக்டோபர் *7*ம் தேதிக்குப் பிறகு இஸ்ரேலின் ராணுவத் தாக்குதலில் *56,000* க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையே அமெரிக்காவின் முன்மொழிவின் பேரில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், காசாவிலும் அமைதி திரும்ப வேண்டுமென பல்வேறு நாடுகளும் கோரிக்கை வைத்து வருகின்றன.

# இனி கனடாவுடன் வர்த்தக பேச்சு கிடையாது: ட்ரம்ப் திட்டவட்டம்

**வாஷிங்டன், ஜூன் 29-**

கனடாவுடன் வர்த்தகம் இனி ரத்து செய்யப்படுவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறினார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக வர்த்தகம் மற்றும் இறக்குமதி விவகாரத்தில் ட்ரம்ப் கடும் கெடுபிடிகளை காட்டி வருகிறார்.அமெரிக்காவின் அண்டை நாடுகளில் ஒன்றாக இருக்க கூடிய கனடாவுக்கும் வர்த்தக பேச்சு விவகாரத்தில் கடும் நெருக்கடி கொடுத்து வருகிறார்.

கனடவை அமெரிக்காவின் மற்றொரு மாகாணம் என்று கூட பேசி அந்நாட்டை ட்ரம்ப் சீண்டியிருந்தார். இந்த நிலையில், அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனங்கள் மீது கூடுதல் வரியை கனடா விதித்தது. இதனால் கடும் கோபம் அடைந்த ட்ரம்ப், கனடாவின் செயல் அப்பட்டமான விதி மீறல் என்றும் அந்த நாட்டுடனான வர்த்தக பேச்சு உடனடியாக ரத்து செய்யப்படுவதாகவும் கூறியுள்ளார்.

### 'அப்பா'விடம் ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை:
# இஸ்ரேல் மீது ஈரான் காட்டம்

**டெஹ்ரான், ஜூன் 29-**

இஸ்ரேலுக்கு 'அப்பா'விடம் ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று ஈரான் காட்டமாக தெரிவித்துள்ளது.

ஈரான் உச்ச தலைவரை படுகொலையிலிருந்து காப்பாற்றியதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி கடுமையாக விமர்சித்துள்ளார். இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஒரு ஒப்பந்தத்தை விரும்புவதில் உண்மையாக இருந்தால், ஈரானின் உச்ச தலைவரான அயதுல்லா கொமேனியை அவமதிக்கும் மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத வார்த்தைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அவரது மில்லியன் கணக்கான இதயப்பூர்வமான ஆதரவாளர்களை காயப்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

நமது ஏவுகணைகளால் தகர்க்கப்படுவதைத் தவிர்க்க, இஸ்ரேலுக்கு 'அப்பாவிடம்' ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உலகுக்குக் காட்டிய மகத்தான சக்தி வாய்ந்த ஈரான் மக்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் அவமானங்களை தயவுசெய்து கவனத்தில் கொள்ளாதீர்கள்' என்று பதிவிட்டுள்ளார். முன்னதாக, ட்ரம்ப் தனது சமூக வலைதளத்தில், ஈரான் உச்ச தலைவர் கொமேனியை நன்றியுணர்வு இல்லாதவர் என்று குற்றம் சாட்டி, அவரை படுகொலையிலிருந்து காப்பாற்றியதாக தெரிவித்திருந்தார். இதற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக ஈரான் வெளியுறவு அமைச்சர் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

### ஏர் இந்தியா விமான விபத்து:
# விசாரணை அதிகாரிக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு

**புதுடெல்லி, ஜூன் 29-**

ஏர் இந்தியா விமான விபத்தில் விசாரணை அதிகாரிகரு உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குஜராத்தின் ஆமதாபாத் நகரில் இருந்து இங்கிலாந்தின் லண்டன் நகர் நோக்கி கடந்த *12*-ந்தேதி ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் ஏ.ஐ.-*171* என்ற எண் கொண்ட, போயிங் ட்ரீம்லைனர் ரக விமானம் ஒன்று புறப்பட்ட *30* விநாடிகளில் விபத்தில் சிக்கியது. இதில், விமான பயணி ஒருவரை தவிர மீதமிருந்த *241* பயணிகள் உள்பட *270* பேர் வரை பலியானார்கள். இந்த விவகாரம் பற்றி விமான விபத்து புலனாய்வு துறையின் இயக்குநர் ஜெனரல் ஜி.வி.ஜி. யுகந்தர் தலைமையிலான குழு விசாரித்து வருகிறது. இந்நிலையில், அவருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டு உள்ளது என உளவு தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து, அவருக்கு வி.ஐ.பி. பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது. இதன்படி, ஆயுதம் ஏந்திய *3* முதல் *4* வீரர்கள் அவருடைய பாதுகாப்புக்கு செல்வார்கள். மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட உத்தரவின்படி, எக்ஸ் பிரிவு பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

### சென்னையில் தொடரும் வேட்டை:
# போதைப்பொருள் விற்பனை செய்த நைஜீரிய பெண் கைது

**சென்னை, ஜூன் 29-**

சென்னையில் போதைப்பொருளை கடத்தி வந்து விற்பனை செய்த நைஜீரிய பெண்ணை போலீசார் கைது செய்தனர்.

கொகைன் போதைப்பொருளை கடத்திய கும்பலை போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் சென்னையில் தொடர்ந்து வேட்டையாடி பிடித்து வருகிறார்கள். சூளைமேடு பகுதியில் கடந்த ஜனவரி *25*-ந்தேதி பயாஸ் அகமது என்பவர் முதலாவதாக கைது செய்யப்பட்டார். அவரை தொடர்ந்து அடுத்தடுத்து *14* குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். தற்போது இந்த ஒரே வழக்கில் இதுவரை *24* பேர் கைதாகி இருக்கிறார்கள்.

தற்போது *25*-வது நபராக கடந்த *3* தினங்களுக்கு முன்பு பெங்களூரை சேர்ந்த சாரா குமாமா (வயது *41*) என்ற நைஜீரிய பெண் கைது செய்யப்பட்டார். அவரை சென்னை அழைத்துவந்து நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் ஏற்கனவே நைஜீரிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து கைது வேட்டை நடந்து வருகிறது.

# அந்தமானில் நிலநடுக்கம்

**புதுடெல்லி, ஜூன் 29-**


அந்தமானில் *4.6* ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிக்கோபர் தீவுகளில் நேற்று முன்தினம் இரவு *8.28* மணியளவில் *4.6* ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதுகுறித்து தேசிய நிலநடுக்கவியல் மையம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ' அந்தமான் நிக்கோபர் தீவின் போர்ட்பிளேயரில் இருந்து *254* கிமீ தென்கிழக்கில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் மையம் அட்சரேகை *9.75* டிகிரி வடக்கு மற்றும் தீர்க்கரேகை *94.06* டிகிரி கிழக்காக இருந்தது. கடலுக்கு அடியில் *25* கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையம் இருந்தது' என்று தெரிவித்துள்ளது. முன்னதாக கடந்த ஜூன் *25* அன்று அந்தமான் கடலில் *4.2* ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதேபோல கடந்த மாதம் மணிப்பூரில் இரண்டு மணி நேர இடைவெளியில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் பதிவாகின. இருப்பினும், இதனால் எந்த சேதமும் ஏற்படவில்லை.

நேற்று முன்தினம் தெற்கு பிலிப்பைன்ஸிலும் *6.1* ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. டாவோ ஆக்சிடென்டல் மாகாணத்தில் இருந்து *101* கிலோமீட்டர் ஆழத்திலும், சுமார் *70* கிலோமீட்டர் தொலைவிலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

**வாக்களிப்பது நமது கடமை**

**29-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள். அலைச்சல்கள் அதிகரிக்கும். வியாபார வரவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. வயிற்று உபாதைகள் தொல்லை தரலாம். படுத்தவுடன் தூக்கம் வராது.

**ரிஷபம்:-** மனத் தெம்பும், மன மகிழ்ச்சியும் அதிகரிக்கும். காரியம் யாவினும் கை கொடுப்பாள் மனைவி. குழந்தைகள் பால் பாசம் பொழிவார்கள். அரசு ஆதரவால் தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும். உற்சாக மிகுதியால் உள்ளம் மகிழும்.

**மிதுனம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, குடும்ப சுகம் ஆகியவை குறையும். மனைவியின் உடல் நிலையில் அக்கறை தேவை. புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

**கடகம்:-** கல்வியில் தேர்ச்சியும், புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் ஓங்கும். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். இனிய பயணங்கள் மன மகிழ்ச்சி தரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான பண வரவால் சந்தோஷம் நிலவும்.

**சிம்மம்:-** மாற்றம் ஒன்றே மாறாதது. எனவே, மாற்றங்களை எதிர் பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**கன்னி:-** பெண்களின் மூலம் இலாபம், அவர்கள் நட்பால் சுகம் ஏற்படும் இனிய நாள். கல்வியில் தேர்ச்சி உண்டு. ஆரோக்கியம் மேம்படும். பிரிந்தவர் சேரும் பொன்னான நாள். எல்லா வகையிலும் ஏற்றம் பெறும் நாள்.

**துலாம்:-** காரிய வெற்றி தரும் களிப்பான நாள். அரசு ஆதரவு இருக்கும் அனுகூலமான நாள். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் தேகதிடம் அதிகரித்து, இந்திர போகம் ஏற்படும் இனிய நாள்.

**விருச்சிகம்:-** தெய்வ சிந்தனை அதிகரிக்கும் நாள். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், குளம் போன்ற திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும். உல்லாசப் பயணங்கள் உணர்வுபூர்வமான சந்தோஷம் நிலவும்.

**தனுசு:-** எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். எவருக்கும் தீமை செய்யும் எண்ணத்தைக் கை விடுவது நல்லது. பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகும். உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**மகரம்:-** புதிய பயிற்சிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகன மற்றும் போஜன சுகங்கள் கூட, அவருக்கு என்ன பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள். காதல் வலையில் விழ நேரலாம். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

**கும்பம்:-** இன்று, அனைத்து நலன்களும் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும். உதவிக்கரம் நீட்டுவர் நண்பர்கள். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும். புகழும், புதுப் பெண்கள் சினேகமும் உண்டாகும்.

**மீனம்:-** குழந்தைகள் உடல் நிலையில் அக்கறை தேவை. பயணத்தில் கவனம் தேவை. அனைவருடனும் சுமுகமாக, அமைதியாக நடந்தால் எதிர்ப்புகள் குறையும். கணபதியை வணங்க கவலைகள் அகலும்.



வட சென்னை வடக்கு (மேற்கு) மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள புரசை வி.எஸ். பாபு, அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற வெற்றிபயணத்திற்கு
# மதுரைக்கு வருகை தரும் எடப்பாடியாருக்கு வரலாற்று சிறப்புமிக்க வரவேற்புக்கு ஏற்பாடு
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தலைமையில் தீர்மானம்

**மதுரை, ஜூன் 29-**

மக்களைக் காப்போம்,தமிழகத்தை மீட்போம் என்ற வெற்றிபயணத்திற்கு மதுரைக்கு வருகை தரும் எடப்பாடியாருக்கு சிறப்பான முறையில் வரலாற்று சிறப்புமிக்க வரவேற்பு அளிக்கப்படும் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் தேர்தல் பணிகள் மற்றும் கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து தெப்பக்குளம் அருகே தனியார் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ தலைமை எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் தேர்தல் பொறுப்பாளர் ஆணிமுத்து மற்றும் மாவட்ட,பகுதி,வட்ட,சார்பு அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,

*2026* சட்டமன்ற தேர்தலையொட்டி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்கு மகத்தான வெற்றி பெற்றுத்தரும் வகையில், "மக்களை காப்போம், தமிழகத்தில் மீட்போம் "என்ற தாரக மந்திரத்தோடு ஜூலை *7*- ம் தேதி முதல் *21* வரை முதல் கட்டமாக தேர்தல் சுற்றுப்பயணம் செல்லும், கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு ,மதுரை மாநகர் மாவட்ட கழகம் இந்த சுற்றுப்பயணம் மாபெரும் வெற்றி பயணமாக அமையும் வகையில் இறைவனை பிரார்த்தனை செய்ததோடு, மதுரைக்கு சுற்று பயணம் வருகை தரும் பொழுது, தமிழகத்திலே மதுரை மாநகர் மாவட்ட கழகம் தான் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்தது என்ற வரலாற்றை உருவாக்கும் வகையில் நாம் சிறப்பாக களப்பணியாற்றுவோம் என்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, தமிழகம் முழுவதும் உள்ள *68,500* வாக்குச்சாவடிகளில் பூத் கமிட்டி கிளை கழக கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.இதனை தொடர்ந்து மதுரை மாநகரில் உள்ள *978* வாக்குச்சாவடிகளில் சிறப்பாக பூத் கமிட்டி கிளைக் கழக பொறுப்பாளர்களை நியமித்த கழக நிர்வாகிகளுக்கு, மதுரை மாநகர் மாவட்ட கழகம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. தந்தை பெரியார்,பேறிஞர் அண்ணா ஆகியோரின் புகழை புரட்சித்தலைவர், புரட்சித்தலைவி அம்மா அதனைத் தொடர்ந்து கழக பொதுச்செயளாலர்,எடப்பாடியார் புகழை நிறுத்தி வருகிறார். கழகத்திற்கு இளம் ரத்தம் பாய்ச்சும் வகையில் தொடர்ந்து பல்வேறு வியூங்களை கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் வகுத்து வரும் வேளையில்,தற்போது இளம் தலைமுறை விளையாட்டு வீரர்கள் அணி என்கின்ற புதிய அணியை எடப்பாடியார் உருவாக்கியுள்ளார். ஆகவே இந்த அணிக்கு மதுரை மாநகர் மாவட்ட கழகத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் அதிக அளவில் உறுப்பினர்களை சேர்த்து மதுரை மாநகர் மாவட்டம் தான் அதிக அளவில் உறுப்பினர்கள் சேர்த்தது என்ற வரலாற்று சிறப்பை நாம் பெற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எனக்கு பின்னால் இந்த இயக்கம் நூறாண்டுகள் மக்கள் பணியாற்ற வேண்டும் என்ற அம்மாவின் லட்சியம் முழங்களை தாரக மந்திரமாக கொண்டு,மக்களாக தன்னையே அர்ப்பணித்து வாழும், கழகப் பொதுச்செயளாலர் எடப்பாடியார் வருகின்ற *2026* சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழகத்தில் எந்த இயக்கங்களும் தேர்தல் வாக்குறுதி அறிவிக்காத வகையில் ,முதன் முதலாக அமைதி, வளம், வளர்ச்சி உருவாக்கியை இதன் மூலம் தமிழகத்தை அமைதி பூங்காவாக உருவாக்கி காட்டுவேன் என்று தேர்தல் வாக்குறுதி அறிவித்து தேர்தல் பணியை பணியை உருவாக்கியுள்ளார். ஆகவே *2026* சட்டமன்ற தேர்தலில் மதுரை மாவட்டத்திலுள்ள *10* தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி வெற்றி பெற்றது என்ற நிலையை உருவாக்கி, மீண்டும் தமிழகத்தில் எடப்பாடியார் தலைமையில் அம்மாவின் ஆட்சி மலர இரவு, பகல்பாராது அயராது களப்பணி ஆற்றுவோம். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# குற்றால அருவியில் அடித்து வரப்பட்ட ராட்சத உடும்பு..!

**தென்காசி, ஜூன் 29-**

குற்றால அருவியில் திடீரென அடித்து வரப்பட்ட ராட்சத உடும்பால் பெண்கள் பயந்து ஓட்டம் பிடித்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்த மழை காரணமாக குற்றால அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை *4* நாட்களுக்கு பிறகு நேற்று முன்தியம் விலக்கிக்கொள்ளப்பட்டது. இதனால் குற்றாலத்தில் குவிந்துள்ள சுற்றுலா பயணிகள், அருவிகளில் ஆனந்தமாக குளியல் போட்டு வருகின்றனர். இந்த நிலையில், குற்றாலம் மெயின் அருவியில் பெண்கள் குளிக்கும் பகுதியில் பல பெண்கள் வரிசையில் நின்று குளித்துக்கொண்டு இருந்தனர். அப்போது அருவியில் அடித்து வரப்பட்ட ராட்சத உடும்பு ஒன்று திடீரென பெண்கள் குளிக்கும் பகுதியில் விழுந்தது. இதைக்கண்ட அங்கிருந்த பெண்கள் பயந்துபோய் அலறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இதையடுத்து அப்பகுதிக்கு வந்த தீயணைப்புத் துறையினர், உடும்பை லாவகமாக பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். அந்த உடும்பை வனத்துறையினர் வனப்பகுதியில் விடும் பணியில் ஈடுபட்டனர். அருவியில் விழுந்த உடும்பைக் கண்டு பெண்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்ததால் குற்றாலம் மெயின் அருவி பகுதி சிறிதுநேரம் பரபரப்புடன் காணப்பட்டது.

# 6.0 ரிக்டர் அளவில் பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

**மணிலா, ஜூன் 29-**

பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸின் மின்டானாவோ பகுதியில் நேற்று காலையில் திடீரென சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை *4.37* மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் *6.0* ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

*105* கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், *5.28* டிகிரி வடக்கு அட்சரேகையிலும், *126.08* டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை

### திருச்சி மாநகராட்சியில் பிரச்சனைகள்:
## வரும் 3-ம் தேதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

**சென்னை, ஜூன் 29-**
திருச்சி- மதுரை தேசிய நெடுஞ்சாலை, பஞ்சப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 3-ம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவிருப்பதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் இ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், திருச்சி மாநகராட்சியில் நிலவி வரும் பல்வேறு சீர்கேடுகளால் மக்கள் கடும் அவதியுற்று வருவதாக, தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அதன் விபரம் வருமாறு: திருச்சி- மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பஞ்சப்பூரில், 40 ஏக்கர் பரப்பளவில் சுமார் 246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3600-க்கும் மேற்பட்ட பேருந்துகளைக் கையாளும் வகையில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டது.

திருச்சியில் 2 மணி நேரத்திற்கும் மேலாக பெய்த சிறிய மழைக்கே, புதிய பேருந்து நிலையக் கட்டிடம் தாக்குப்பிடிக்க முடியாமல் மேற்கூரைகளின் வழியே மழைநீர், பயணிகள் நிற்கும் நடை மேடையில் விழுவதை பொதுமக்கள் கிண்டலடித்து வரும் அவலம் ஏற்பட்டுள்ளது. பஞ்சப்பூரில் பேருந்து முனையம் திறக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில், இதுவரை பேருந்துகள் இயக்கப்படவில்லை. திமுக அரசு இம்முனையத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைக்கூட செய்யாமல் அவசர கதியில் திறந்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பஞ்சப்பூர் பேருந்து நிலையத்திற்கு செல்லும் வழியில் உள்ள ஜங்ஷன் ரயில்வே மேம்பாலம் இடிக்கப்பட்ட நிலையில், கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக, திருச்சியில் இருந்து வெளியூர் செல்லும் பேருந்துகளாக இருக்கட்டும், வெளியூர்களில் இருந்து திருச்சி மாநகருக்குள் வந்து செல்லும் பேருந்துகளாக இருக்கட்டும், அரிஸ்டோ ரவுண்டானா மேம்பாலம் மற்றும் தலைமைத் தபால் நிலையம் அருகே உள்ள மேம்பாலம் ஆகியவற்றை மட்டுமே சார்ந்து செல்வதால், மாநகரப் பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவுகிறது.

திருச்சி மாநகரில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கட்டப்பட்டு வரும் மாரிஸ் ரயில்வே மேம்பால கட்டுமானப் பணிகள் இன்னும் நிறைவடையாத காரணத்தால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதோடு, போக்குவரத்து நெரிசலால் திருச்சியே சில நேரங்களில் ஸ்தம்பித்துவிடுகிறது. இதன் காரணமாக திருச்சி மாநகர மக்கள் மிகுந்த அவதியுறுகின்றனர்.

பாலக்கரையில் இருந்து பீமநகரை இணைக்கும் பகுதியில் உள்ள சாலைகளில் ஆங்காங்கே விரிசல் ஏற்பட்டும், தார் உருகியும் பள்ளங்கள் ஏற்பட்டு, பார்ப்பதற்கு வேகத் தடைபோல் காட்சி அளிக்கிறது. இதனால் வாகனங்கள் பழுதடைந்துவிடுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து சத்திரம் பேருந்து நிலையம் செல்லக்கூடிய பிரதான சாலையான பாலக்கரை சாலையில், பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்காக பள்ளங்கள் தோண்டப்பட்டுள்ளதால் மக்கள் பல்வேறு வகைகளில் சிரமப்படுகின்றனர். இந்தச் சாலையை சீரமைத்துத் தரக்கோரி பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் சாலை மறியல் போட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல், மக்களை நாள்தோறும் பல்வேறு வகைகளில் துன்புறுத்தி வரும் திமுக-வின் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி வடி மதுரை தேசிய நெடுஞ்சாலை, பஞ்சப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும்; திருச்சி மாநகரில் கட்டப்பட்டு வரும் மாரிஸ் ரயில்வே மேம்பால காட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்கவும்; பாலக்கரையில் இருந்து பீமநகரை இணைக்கும் பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள சாலைகளை உடனடியாக சீரமைக்கவும்; பாலக்கரை சாலையில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தை வலியுறுத்தி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக திருச்சி மாநகர் மாவட்டத்தின் சார்பில், 3.7.2025 – வியாழக் கிழ மை காலை 10.30 மணியளவி ல், மரக்கடை எம்.ஜி.ஆர். திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ் வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கு:
## கனிமொழி எம்.பி. நேரில் ஆய்வு



**திருச்செந்தூர், ஜூன் 29-**
திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கையொட்டி பக்தர்கள் வசதிக்காக ஏற்பாட்டு செய்யப்பட்டுவரும் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கனிமொழி எம்.பி. நேற்று நேரில் ஆய்வு செய்தனர்.

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கு வரும் 7ம் தேதி நடைபெற உள்ளது. காலை 6.15 மணி முதல் 6.50 மணிக்குள் குடமுழுக்கு நடைபெற உள்ளது. இந்த குடமுழுக்கில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடமுழுக்கு இன்னும் சில நாட்களில் நடைபெற உள்ள நிலையில் பக்தர்கள் வசதிக்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கையொட்டி பக்தர்கள் வசதிக்காக ஏற்பாட்டு செய்யப்பட்டு வரும் பணிகளை கனிமொழி எம்.பி. நேற்று நேரில் ஆய்வு செய்தார். வாகன நிறுத்துமிடங்கள், பொதுமக்கள் நடைபாதைக்காக அமைக்கப்பட்ட மரப்பாலம் உள்ளிட்டவற்றை கனிமொழி ஆய்வு செய்தார். அவருடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், அதிகாரிகள் உள்ளிட்டோரும் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

## சிறு, குறு நிறுவனங்களின் புகாருக்கு விரைவில் தீர்வு
### ஜனாதிபதி திரௌபதி முர்மு பேச்சு

**புதுடெல்லி, ஜூன் 29-**
சிறு, குறு நிறுவனங்களின் பணப்பட்டுவாடா தாமத புகாருக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார். உலக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில், ஆன்லைன் சர்ச்சை தீர்வு வலைத்தளம் தொடங்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில், ஜனாதிபதி திரௌபதி முர்மு கலந்து கொண்டு பேசியதாவது:- சிறு, குறு நிறுவனங்கள் நிதி தட்டுப்பாடு, கார்ப்பரேட் நிறுவனங்களுடன் போட்டி, பணப்பட்டுவாடாவில் தாமதம் உள்ளிட்ட சவால்களை சந்தித்து வருகின்றன. மத்திய அரசின் முயற்சிகளால், பதிவு செய்யப்பட்ட சிறு, குறு நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொருட்கள் வாங்குவோருக்கும், சிறு, குறு நிறுவனங்களுக்கும் இடையிலான பணப்பட்டுவாடா தாமதம் குறித்த சர்ச்சைகளுக்கு இப்போது தொடங்கப்பட்டுள்ள வலைத்தளம் விரைந்து தீர்வு காணும். இவ்வாறு அவர் பேசினார்.

### அரசு விழாவுக்காக கட்டாய வசூல்:
## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நடவடிக்கை

**திண்டுக்கல், ஜூன் 29-**
அரசு விழாவுக்காக அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களிடம் கட்டாய வசூல் நடப்பதாக வெளியான ஆடியோவில் பேசிய நபரை தேடி வருகிறோம் என சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.81 கோடியில் புதிய சி.டி.ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே மற்றும் புளூரோஸ்கோபி கருவிகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (ஜூன் 28) தொடங்கி வைத்தார். இதே போல், ரூ.2.25 கோடியில் திண்டுக்கல்லில் 4 இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தினமும் புறநோயாளிகளாக 3,600 பேரும், உள் நோயாளிகளாக 1,200-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெறுகின்றனர். நோயாளிகளின் எண்ணிக்கை அதிகம் என்பதால் இந்த மருத்துவமனையில் கூடுதலாக சி.டி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி வாங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு 1,500 கட்டிடங்கள் பயன்படுத்த முடியாமல் இருந்தன. தற்போது 1,600 கட்டிடங்கள் புதிதாக கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

வரும் ஜூலை 3-ம் தேதி சென்னையில் இருந்தபடி காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகம் முழுவதும் 208 நகர்ப்புற நகர் வாழ்வாதார மையங்கள், 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைக்க உள்ளார். ஏற்கனவே, 500 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் தடுப்பூசி செலுத்தும் பணி குறிப்பிட்ட கால இடைவெளியில் தவறாமல் நடைபெறும். அந்த பணிகள் அரசு செவிலியர்களுக்கும், தற்காலிக தடுப்பூசி போடும் பணியாளர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். மருத்துவர்கள் காலிப்பணியிடம் விரைவில் நிரப்பப்படும். திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஆஞ்சியோ சிகிச்சை, திறந்த இருதய அறுவை சிகிச்சை விரைவில் தொடங்கப்படும்.

மருத்துவ துறை வரலாற்றில் 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூ.1,018 கோடி செலவில் ஒரே நேரத்தில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதில், திருத்தணி அரசு தலைமை மருத்துவமனையில் பணிகள் முடிந்த நிலையில் முதல்வர் திறந்து வைத்துள்ளார். இரண்டு மாதத்துக்குள் 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும் முழுவதுமாக மக்கள் பயன்பாட்டுக்கு வரும்.

தென்காசியில் அரசு விழாவுக்காக அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களிடம் கட்டாய வசூல் நடப்பதாக வெளியான ஆடியோவில் பேசிய நபரை தேடி வருகிறோம். தென்காசி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்தும், 3 மருத்துவமனை இணை இயக்குநர்கள் மூலம் விசாரணை நடத்தி வருகிறோம். என்று அவர் கூறினார்.

### ஆஸ்கர் தேர்வுக்குழுவில் இடம்:
## வாழ்த்து கூறிய முதல்வருக்கு நன்றி தெரிவித்தார் கமல்ஹாசன்



**சென்னை, ஜூன் 29-**
ஆஸ்கர் தேர்வுக்குழுவில் இடம் பெற்ற தனக்கு வாழ்த்து கூறிய மு.க.ஸ்டாலினுக்கு நடிகர் கமல்ஹாசன் நன்றி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் ஆஸ்கர் விருது பெறும் படங்களைத் தேர்வு செய்யும் குழுவில் இடம்பெறுமாறு நடிகர் கமல்ஹாசனுக்கு ஆஸ்கர் விருதுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. இந்தியாவில் கமல்ஹாசனுடன் நடிகர் ஆயுஷ்மான் குரானா, படத் தயாரிப்பாளர் கபாடியா, காஸ்டியூம் டிசைனர் மேக்சிமா பாசு, டாக்குமென்டரி இயக்குனர் ஸ்மிருதி முந்த்ரா, ஒளிப்பதிவாளர் ரன்பீர் தாஸ் ஆகியோருக்கும் ஆஸ்கர் நிர்வாகக் கமிட்டி அழைப்பு விடுத்துள்ளது.

98வது ஆஸ்கர் விருது விழா அடுத்தாண்டு மார்ச் 15ம் தேதி நடைபெற உள்ளது.

இந்த விழா, லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள டால்பி தியேட்டரில் நடைபெறும். நிகழ்ச்சியை கோனன் ஓ'பிரையன் தொகுத்து வழங்குவார். விருதுக்கான பரிந்துரைகள் ஜனவரி 22ம் தேதி வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், உலக அளவில் திரைத்துறையின் உச்சபட்ச விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பினைப் பெற்றிருக்கும் அன்பு நண்பர் - கலைஞானி கமல்ஹாசனுக்கு என் வாழ்த்துகள்! என்று பதிவிட்டிருந்தார். அதனை தொடர்ந்து தனக்கு வாழ்த்து தெரிவித்திருந்த மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கமல்ஹாசன் தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "ஆஸ்கர் அமைப்பின் அழைப்பு ஒரு மகிழ்வென்றால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் சொற்கள் மேலும் மகிழ்வு. மிக்க நன்றி." என்று பதிவிட்டுள்ளார்.

## பாகிஸ்தானியர்கள் 40 பேர் தமிழகத்தில் தங்கியுள்ளனர்
### ஐகோர்ட் மதுரை கிளையில் அரசு தகவல்

**மதுரை, ஜூன் 29-**
தமிழகத்தில் 40 பாகிஸ்தானியர்கள் தங்கி உள்ளனர் என அரசு தரப்பில் மதுரை ஐகோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

மதுரையை சேர்ந்த ரமேஷ் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "தமிழகத்தில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மர் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்தவர்களை வெளியேற்ற உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தார். இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த ஐகோர்ட்டு இது தொடர்பாக அரசு தரப்பில் பதில் அளிக்கும்படி உத்தரவிட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், மரியகிளாட் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், தமிழகத்தில் 40 பாகிஸ்தானியர்கள் தங்கியுள்ளனர். இவர்களில் 16 பேர் நீண்ட கால விசா பெற்று உள்ளனர். 24 பேர் நீண்ட கால விசா கேட்டு விண்ணப்பித்து உள்ளனர். இவர்கள் மத்திய அரசின் செல்லுபடியாகும் விசாவின் கீழ் தமிழகத்தில் தங்கியிருக்கின்றனர். இதை முறைப்படுத்த அல்லது அவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட வெளிநாட்டினர் மீது 65 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

அதேபோல தமிழகத்தில் தற்போது மியான்மர் நாட்டை சேர்ந்த 95 பேர் தங்கியுள்ளனர். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சிறப்பு முகாமில் இலங்கை உட்பட அனைத்து வெளிநாட்டினரையும் அவர்கள் தொடர்பான வழக்கு முடியும் வரை தங்க வைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தினர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். தமிழகத்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு அந்த பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதே போல மத்திய அரசு தாக்கல் செய்த அறிக்கையில், சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டினர் விவகாரம் தொடர்பாக வெளிநாட்டினர் சட்டம் மற்றும் பாஸ்போர்ட் சட்டப்படி சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டினரை நாடு கடத்தும் அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டிருந்தது. இந்த தகவல்களை பதிவு செய்து நீதிபதிகள், மத்திய அரசின் அறிக்கையை பதில் மனுவாக தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை 3 வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

### இந்தியாவுக்குள்
## சட்டவிரோதமாக நுழைய முயன்ற இலங்கையை சேர்ந்த 3 பேர் கைது



**ராமேசுவரம், ஜூன் 29-**
இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற இலங்கையை சேர்ந்த 3 நபர்களை இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்தனர்.

கடலோர காவல் படையின் ஹோவர்கிராப்ட் எனப்படும் நீர்-நிலப்படகு ஏ.சி.வி.ஹெச் 197, நேற்று காலை சுமார் 8 மணி அளவில் வழக்கமான கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அப்போது நான்காவது தீவுத்திட்டில் மூன்று பேர் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருப்பதை கண்டுபிடித்தனர். உடனடியாக கடலோர காவல் படை வீரர்கள் ஹோவர்கிராப்ட்டை அவர்களை நோக்கி திருப்பி அவர்களை பிடித்து விசாரித்தனர். அதில் அவர்கள் இலங்கையின் மன்னார் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும், சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைய அவர்கள் முயற்சித்ததும் தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 3 பேரும் மண்டபம் கடற்கரைக்கு அழைத்து வரப்பட்டு தமிழ்நாடு போலீசாரிடம் மேல்விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

## பா.ஜ.க.வை சேர்ந்தவருக்கு மீண்டும் அமைச்சர் பதவி
### புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி பேட்டி

**புதுச்சேரி, ஜூன் 29-**
பா.ஜ.க.வை சேர்ந்தவருக்கே மீண்டும் அமைச்சர் பதவி வழங்கப்படும் என புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேட்டியளித்து உள்ளார்.

புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் உடன் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், புதுச்சேரியில் ஆதிதிராவிட நலத்துறை மந்திரியாக இருந்து வந்தவர் சாய் ஜெ சரவணன் குமார்.

இவர் ஊசுடு தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்றார். பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான இவருக்கு புதுவை சட்டப் பேரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை மந்திரி பதவி வழங்கப்பட்டது.

இந்த நிலையில், ஆதிதிராவிடர் நலத்துறை மந்திரி பதவியை சாய் ஜெ சரவணன் குமார் திடீரென ராஜினாமா செய்துள்ளார். இதுகுறித்து, அவர் ஒரு விளக்கம் அளித்துள்ளார். அதில், பா.ஜ.க. தலைமை உத்தரவிட்டதன் பேரில், தனது மந்திரி பதவியை ராஜினாமா செய்ததாக தெரிவித்துள்ளார். திடீரென அவர் மந்திரி பதவியை ராஜினாமா செய்வதற்கு என்ன காரணம் என கேள்வி எழுந்துள்ளது. ஏற்கெனவே, ஆதிதிராவிடர் நலத்துறை மந்திரி பதவியில் இருந்த சந்திர பிரியங்கா தனது மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், சாய் ஜெ சரவணன் குமாரும் மந்திரி பதவியை ராஜினாமா செய்துள்ளார். இது புதுவை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், பா.ஜ.க.வை சேர்ந்தவருக்கே மீண்டும் அமைச்சர் பதவி வழங்கப்படும் என புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேட்டியளித்து உள்ளார். இதே போன்று, புதுச்சேரி துணை நிலை கவர்னர் கைலாசநாதனை சந்தித்து இதற்கான பரிந்துரையை வழங்கியுள்ளார். இதுபற்றி கவர்னர் மாளிகையில் இருந்து விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளிவரும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

### பூரி ஜெகநாதர் கோவில் ரத யாத்திரை:
## 625 பேருக்கு உடல்நலம் பாதிப்பு

**பூரி, ஜூன் 29-**
பூரி ஜெகநாதர் கோவில் ரத யாத்திரையில் கலந்து கொண்ட 625 பேருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதால் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒடிசா மாநிலம் பூரியில் ஜெகநாதர் கோவில் உள்ளது. இங்கு உலகப்புகழ் பெற்ற ரத யாத்திரை நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்நிலையில், ஜெகநாதர் கோவில் ரத யாத்திரையில் கலந்து கொண்ட 625 பேருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. கடும் வெப்பம் உள்பட பல்வேறு காரணங்களால் உடல்நலக்குறைவு ஏற்பட்ட 625 பேருக்கு முதல் உதவி அளிக்கப்பட்டது. இதில் 9 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## புதுச்சேரி மாநில பா.ஜ.க. தலைவர் பதவிக்கு இன்று வேட்புமனு தாக்கல்

**புதுச்சேரி, ஜூன் 29-**
புதுச்சேரி மாநில பா.ஜ.க. தலைவர் தேர்தலுக்கு இன்று காலை 10 முதல் 12 மணிக்குள் வேட்பு மனுதாக்கல் நடைபெற இருக்கிறது. ஒருவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அகில இந்திய அளவில் பா.ஜ.க.வுக்கு புதிய தலைவர் தேர்வு செய்யப்பட உள்ளார். இதற்காக நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.க.வுக்கு மாநில தலைவர்கள், நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். யூனியன் பிரதேசமான புதுவையில் பா.ஜ.க. தலைவர் தேர்வு செய்யப்பட உள்ளார். இதற்கான தேர்தல் ஜூன் 30ம் தேதி நடைபெற உள்ளது.

இதற்கான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி ஞாயிற்றுக்கிழமை காலை 10 முதல் 12 மணி வரை வேட்புமனு தாக்கல் நடக்கிறது. மதியம் ஒரு மணி முதல் 3 மணி வரை மனுக்களை திரும்பப்பெறலாம். இதற்கான அறிவிப்பை தேர்தல் நடத்தும் அதிகாரி அகிலன் வெளியிட்டுள்ளார்.

அநேகமாக ஒருவர் மட்டுமே மனு தாக்கல் செய்வார். அவரையே இன்று ஏகமனதாக மாநில தலைவராக தேர்வு செய்யப்பட்டதாக மத்திய அமைச்சர் தருண்சுக் அறிவிக்க உள்ளார். புதிய மாநிலதலைவராக வி.பி.ராமலிங்கம் தேர்வு செய்யப்படலாம் என தெரிகிறது. இவர் நியமன எம்எல்ஏவாக இருந்து தனது பதவியை நேற்று முன்தினம் ராஜிநாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலைமை ஆசிரியர் பதவி உயர்வில் இடஒதுக்கீடு
### மாற்றுத் திறனாளி விவரம் சேகரிப்பு

**சென்னை, ஜூன் 29-**
அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வில் 4 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்காக மாற்றுத்திறனாளி ஆசிரியர்கள் விவரங்களை பள்ளிக்கல்வித் துறை சேகரித்து வருகிறது. பள்ளிக் கல்வித்துறை இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதியான முதுநிலை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பட்டியல் கோரப்பட்டு அதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டன. அதன் அடிப்படையில் தகுதியுள்ள ஆசிரியர்களின் உத்தேச பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. தொடர்ந்து பட்டியலில் உள்ள ஆசிரியர்களின் விவரங்களை சரிபார்த்து திருத்தம், நீக்கம், சேர்க்கை விவரங்கள் பெறப்பட்டு தொகுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின்படி மாற்றுத்திறனாளிகளுக்கான பதவி உயர்வில் 4 சதவீத இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதை கருத்தில் கொண்டு உத்தேச முன்னுரிமை பெயர் பட்டியலில் உள்ள ஆசிரியர்களில் 4 சதவீத இட ஒதுக்கீடு அடிப்படையில் தகுதிபெற்றவர்கள் எவரேனும் இருந்தால் அதன் விவரங்களை ஆய்வு செய்து உரிய ஆவணங்களுடன் பள்ளிக்கல்வி இயக்குநரகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதற்கிடையே தற்போதைய அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு 2005-06-ல் பணிநியமனம் பெற்ற ஆசிரியர்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றனர். அதில் மாற்றம் செய்து 2006-07, 2007-08, 2008-09-ம் கல்வியாண்டுகளில் முதுநிலை ஆசிரியர்களாக பணியில் சேர்ந்தவர்கள் எவரேனும் 4 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையில் தலைமை ஆசிரியர் பதவிக்கு தகுதி பெற்றிருப்பின் அதுகுறித்த விவரங்களையும் ஆய்வு செய்து அனுப்ப வேண்டும், என்று அதில் கூறப்பட்டுள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



காங்கிரஸ் ஆட்சிக்கு பிறகு, பிரதமர் வாஜ்பாய் 6 ஆண்டுகால ஆட்சியிலும், பிரதமர் மோடியின் 11 ஆண்டுகால ஆட்சியிலும் கச்சத்தீவை மீட்பது குறித்து இலங்கை பிரதமர்களோடு எப்போதாவது பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்களா? பா.ஜ.க.வுக்கு மீனவர் நலனில் கடுகளவு கூட அக்கறை இல்லை.

**- செல்வப்பெருந்தகை**



விடுதலைச் சிறுத்தை கட்சிக்கு எத்தனை சீட் தருவீர்கள் என்று முதல்வரிடம் கேட்பீர்களா?. எனவே எங்கள் கூட்டணி குறித்து மீண்டும் மீண்டும் கேட்க வேண்டாம் .தேர்தல் வரும்போது கேளுங்கள். மாறுதல் வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம். கூட்டணியில் இருப்பவர்களிடமும் மாறுதல் வேண்டும். அப்போதுதான் ஆட்சி மாற்றம் ஏற்படும்.

**- நயினார் நாகேந்திரன்**



ஏற்றத்தாழ்வுகளை உடைப்பதற்குதான் சீருடை கொண்டு வரப்பட்டது. சீருடை என்பது மத அடையாளங்களை மறைப்பதற்காக கொண்டு வரப்படவில்லை. நாம் எல்லா சாதிகளையும் சமமாக நினைப்பவர்கள். ஆகவே நம் மத அடையாளத்தை அணிவதில் எந்த தவறும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**- அண்ணாமலை**



தமிழக விவசாயிகள் பல்வேறு பிரச்சனைகளில் தவித்து வரும் நிலையில், தற்போது நிலத்தடி நீருக்கும் வரி என்பது அவர்களை விவசாயத்தை விட்டே வெளியேற்றக் கூடிய ஆபத்தை ஏற்படுத்தும். விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலத்தடி நீருக்கான வரி விதிக்கும் முடிவை கைவிட வேண்டும்.

**- டிடிவி தினகரன்**

### விருதுநகர் மாவட்டத்தில்

# மலை பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு விண்ணப்பங்கள் பதியலாம்

### கலெக்டர் சுகபுத்ரா தகவல்

**விருதுநகர், ஜூன் 29-**

2025- 2020 ஆண்டிற்கான சட்டப்மானியக் கோரிக்கையின் போது, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அறிவிப்பு எண்.5-இல் 20.10.2016-க்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் மேற்கண்ட தேதிக்கு முன் பதிவு செய்யப்பட்ட தனிமனைகளுக்கு எந்த காலக்கெடுவும் இல்லாமல் மனு பெறப்பட்டு வரன்முறை செய்து கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறு தனிமனையாக வாங்கிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 01.07.2025 முதல் onlineppa.tn.gov.in என்ற இணைய முகவரி மூலம் விண்ணப்பங்களை பதிவு செய்யலாம்.

மேலும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப் படுத்தும் திட்டத்தின் கீழ், 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 30.06.2026 வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்து, 15.05.2025 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்.70 மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 01.07.2025 முதல் www.tcponline.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணணப்பங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இது போன்று மலையிடப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்களை www.tnhillarealayoutreg.in என்ற இணையதளத்திற்கு பதிலாக 01.07.2025 முதல் 30.11.2025 வரை www.tcponline.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாகவே தங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.சுகபுத்ரா கேட்டுக்கொள்கிறார்.

### கமுதி பசும்பொன் தேவர் கல்லூரியில்

# சர்வதேச போதை பொருள் தடுப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி




**கமுதி, ஜூன் 29-**

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி கோட்டைமேட்டில் உள்ள பசும்பொன் திரு முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியில் சர்வதேச போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி போதை இல்லா சமுதாயம் வேண்டும் என்ற உயரிய நோக்கோடு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு சொற்பொழிவு மற்றும் உறுதி மொழி எடுத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது .

நாட்டு நலப்பணித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மேரிசுஜின் அனைவரையும் வரவேற்றார்.

போதை தடுப்பு குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர். அ. முகம்மது அசாரூதீன் விளக்கவுரை அளித்தார், முதல்வர் முனைவர் கோ.தர்மர் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக கமுதி சார்பு ஆய்வாளர் கௌதம் போதை இல்லா தமிழகம் என்ற தலைப்பில் போதையின் தீமை, சுய ஒழுக்கம், போதை இல்லா சமுதாயம் படைப்பதில் இளைஞர்களின் பங்கு பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் கஜேந்திரநாயகம் போதை இல்லாத தமிழகம் குறித்து வாசிக்க மாணவர்கள் பின்தொடர்ந்தது உறுதி மொழி ஏற்றனர்.

நிறைவாக நாட்டு நலப்பணித் திட்டம் ஒருங்கிணைப்பாளர் பேரா.மாமல்லன் நன்றி கூறினார்.

# நாடாளுமன்றம் முதல் உள்ளாட்சி மன்றம் வரை அனைத்திலும் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம்

### ம.ம.க. தலைவர் ஜவஹருல்லா பேச்சு




**அருப்புக்கோட்டை, ஜூன் 29-**

அருப்புக்கோட்டையில் மதுரை சாலையில் உள்ள தர்கா வளாகத்தில் மனித நேய மக்கள் கட்சி சார்பில் விருதுநகர் மாவட்ட ஜமாத் நிர்வாகிகள் மற்றும் உலமாக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த சந்திப்பு நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லாஹ் கலந்து கொண்டு பேசினார். மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லாஹ் கூறியதாவது:-

மதுரையில் வரும் ஜூலை ஆறாம் தேதி மனித நேய மக்கள் கட்சி சார்பில் இரண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணியும் மாநாடு நடைபெற உள்ளது. அதில் முதல் கோரிக்கை உள்ளாட்சி முதல் நாடாளுமன்றம் வரை முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளாகியும் நாடாளுமன்றம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளது. இந்தியாவில் 15 சதவீதம் முஸ்லிம்கள் உள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் 80 பேர் முஸ்லிம்களாக இருக்க வேண்டும். ஆனால் 24 பேர்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். அதேபோல ராஜ்ய சபாவிலும் இந்தியாவில் உள்ள அனைத்து சட்டமன்றங்களிலும் இதே நிலைதான் இருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களிலும் இதே அவல நிலைதான் இருக்கிறது.

அதேபோல மத்திய அரசு கொண்டுவந்துள்ள வக்பு திருத்த சட்டம் வக்பு சொத்துக்களை கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை சமூக நல்லிணக்கம் கொண்ட அனைத்து கட்சிகளும் நாடாளுமன்றத்தில் உள்ளேயும் வெளியையும் கடுமையாக எதிர்கின்றன. அதேபோல நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தீர்ப்பை ஒத்தி வைத்துள்ள நிலையில் மத்திய அரசு நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் வக்ஃபு திருத்தச் சட்டத்தை பதிவேற்றும் வகையில் இணையத்தை துவங்கி வக்பு சொத்துக்களை பதிவேற்றம் பதிவேற்றம் செய்ய வேண்டும் என மத்திய அரசு சொல்லி உள்ளது. இது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல். இந்த இரண்டு கோரிக்கைகளையும் வலியுறுத்தி ஜூலை 6 மதுரை பாண்டி கோவில் அருகே பேரணியாக துவங்கி அதனை தொடர்ந்து மாநாடும் நடைபெற உள்ளது என கூறினார். அருப்புக்கோட்டையில் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருகிறது. அந்த பணிகளை விரைந்து முடித்து அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலையத்திற்கு காயிதே மில்லத் பெயர் சூட்ட வேண்டும். அதேபோல் விருதுநகர் மாவட்டம் கூமாபட்டி பெரியார் பிளவக்கல் அணையில் ரூ 10 கோடி மதிப்பில் பூங்கா மேம்பாட்டு பணி நடைபெறும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார் அந்த பணிகளை தமிழ்நாடு அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை விடுப்பதாக கூறினார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது ஜனநாயகத்தின் அடி வேர்களை அழிக்கும் முயற்சியாக நாங்கள் இதை பார்க்கிறோம். ஆன்மீக மாநாடு என்பதை யார் வேண்டுமானாலும் நடத்தலாம். அதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. அதே நேரத்தில் இது போன்று ஆன்மீக மாநாட்டில் குறிப்பிட்ட சமூகத்தை குறிப்பிட்ட அரசியல் கட்சியை விமர்சனம் செய்து பேசுவது ஆன்மீக மாநாட்டை கொச்சைப்படுத்தும் நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் திமுக சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வீடும் இந்த ஆட்சியில் மகிழ்ச்சியாக இருக்கிறது. எனவே வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மனிதநேய மக்கள் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பயணிக்கும் தொடர்ந்து முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மீண்டும் அடுத்த முதல்வர் என கூறினார். நிகழ்ச்சியில் ஜமாத் நிர்வாகிகள், உலமாக்கள், மமக கட்சி மாவட்டத் தலைவர் மதார் கான் மற்றும் மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் நடந்த நகை திருட்டில் இருவர் கைது

**பரமக்குடி, ஜூன் 29-**

பரமக்குடி எம்.எஸ்.அக்ரஹாரம் தெருவை சேர்ந்தவர் கடந்த 22-ம் தேதி மதியம் வீட்டில் இருந்துள்ளார். அப்போது இரண்டு பேர் வந்து தாகமாக இருக்கிறது தண்ணீர் தாருங்கள் என அவரிடம் கேட்டுள்ளனர். உடனே அவர் வீட்டுக்குள் சென்று தண்ணீர் கொண்டு வந்து அவர்களுக்கு கொடுத்துள்ளார். அப்போது அந்த 2 பேரும் அவர் கழுத்தில் அணிந்திருந்த 5 1/2 பவுன் தங்க சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.

இது குறித்து அவர் பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். பரமக்குடி நகர் காவல் நிலைய அருகிலேயே சம்பவம் நடந்தது அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில் பரமக்குடி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த இருவரை பிடித்து போலீசா விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள் இருவரும் 5 1/2 பவுன் தங்க சங்கிலியை பறித்ததாக ஒப்புக் கொண்டனர். அதன் அடிப்படையில் இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கான

# உயர்கல்வி முன்பணம் உயர்வு: தமிழக அரசாணை வெளியீடு

**சென்னை, ஜூன் 29-**

அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி சேர்வதற்கான முன்பணம் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழக அரசுப் பணியாளர்களின் குழந்தைகள் உயர் கல்வியில் சேர்வதற்கான முன்பணத்தை அரசு வழங்கி வருகிறது. அந்த வகையில் தொழில்கல்வியில் சேர ரூ.50 ஆயிரமும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் நிறுவனங்களில் சேர ரூ.25 ஆயிரம் என கல்வி முன்பணம் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த சட்டசபை கூட்டத் தொடரில் அவை விதி 110-ன் கீழ் அறிவிப்பு ஒன்றை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயிலும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டில் இருந்து உயர்த்தப்படுகிறது.

அதன்படி, தொழில்கல்வியில் சேர ரூ.1 லட்சமும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் நிறுவனங்களில் சேர ரூ.50 ஆயிரம் என கல்வி முன்பணம் உயர்த்தி வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். இந்த அறிவிப்பை செயல்படுத்துவதற்கான அரசாணையை நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் வெளியிட்டுள்ளார்.

# திருப்பத்தூரில் 10 நிமிடங்களில் பிக்பாஸ்கெட் டெலிவரி

**திருப்பத்தூர், ஜூன் 29-**

பிக்பாஸ்கெட் (டாடா குழும நிறுவனம்) தனது துரித டெலிவரி சேவையை திருப்பத்தூரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது திருப்பத்தூர் மக்களின் ஷாப்பிங் அனுபவத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்லும். இப்போது திருப்பத்தூர் மக்கள் பசுமையான காய்கறி பழங்கள் முதல் மின்னணு மற்றும் வீட்டு உபயோக சாதனங்கள் உட்பட 10,000-க்கும் மேற்பட்ட பொருட்களை 10 நிமிடங்களுக்குள் பிக்பாஸ்கெட் செயலியின் மூலம் டெலிவரி பெற்றுக்கொள்ள முடியும். இந்த துரித டெலிவரி சேவை திருப்பத்தூர் மக்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை உருவாக்கி, வாடிக்கையாளர்கள் தங்கள் வீட்டில் இருந்தே மளிகைப் பொருட்களை முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் எளிதாகக் ஆர்டர் செய்ய உதவுகிறது.

இது குறித்து தேசிய வர்த்தகத்தின் தலைவர் சசி சேகர் கூறுகையில், தற்போது திருப்பத்தூர் மாநகருக்கு பிக்பாஸ்கெட்டை அறிமுகம் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களது சமீபத்திய விரிவாக்கங்கள் அனைத்து தரப்பு மக்களிடமும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும் திருப்பத்தூர் நகரவாசிகள் 10 நிமிட டெலிவரி வசதியைப் வெகுவாக பாராட்டுவார்கள் என்றும், அதனால் அவர்கள் பெரிய அளவில் பயனடைவார்கள் என்றும் நாங்கள் திடமாக நம்புகின்றோம்.இன்றைய வேகமாக மாறிவரும் வாழ்க்கை முறையின் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் வாடிக்கையாளர் மனநிறைவை அதிகரிப்பதற்கான நமது முயற்சி வெகுவாக பயனளிக்கும் என்று கூறினர்.



தமிழ்நாடு யாதவ மகா சபை மதுரை 10 சட்டமன்ற தொகுதி புதிய மாவட்ட தலைவர்களும், மகளிர் அணி தலைவிகளும் நேற்று தமிழ்நாடு யாதவ மகாசபை ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் கே.ஜெயக்குமார் தலைமையில் பொறுப்பேற்று கொண்டனர். மேலும் மாவீரன் அழகுமுத்துக்கோன் குருபூஜை விழாவில் சீரும் சிறப்புமாக நடத்த ஆலோசனை வழங்கப்பட்டது. இதில் மாநில பொதுச்செயலாளர் வேலு மனோகரன், மாநிலத் துணைத் தலைவர் நல்லமணி மணிமாறன், மாநில செயலாளர் கருணாநிதி, செல்லையா சுசி கந்தவேல் ராஜேந்திர பிரசாத், இளைஞர் அணி தலைவர் சீனிவாசன் கலந்து கொண்டனர்.




மதுரை, குட்செட் தெருவில், எம்.எம்.எம். கண் பராமரிப்பு மையத்தை, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி திறந்து வைத்தார். அவருடன், மத்திய அரசு சட்ட ஆலோசகர் டாக்டர் பி.ராமசாமி மற்றும் அண்ணா ஆப்டோமெட்ரி கல்லூரி தலைவர் பி.அண்ணாதுரை, தலைமை நிர்வாக இயக்குனர் மற்றும் கருவிழி சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.பெர்னார்ட் ஆல்பர்ட் ராஜ்குமார், கண் மருத்துவர் டாக்டர் ஆ.பாக்ய சகாய மெர்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ராமநாதபுரம் மாவட்டத்தில்

# விவசாயிகளுக்கான அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம்

**ராமநாதபுரம், ஜூன் 29-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கான அடையாள எண் வழங்கும் வகையில் நடைபெறும் சிறப்பு முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையானது வேளாண் அடுக்ககம் மூலம் நில உடமைகளை உள்ளடக்கிய விவசாயிகளின் தரவுகளை சேகரிப்பதற்கு பிரத்யேகமான விவசாயிகள் பதிவேடு எனும் செயலியை உருவாக்கியுள்ளது. இச்செயலி மூலம் விவசாயிகளின் நில உடமைகளை சரிபார்த்து ஆதார் எண்ணைப் போன்று விவசாயிகளுக்கென தனித்துவமான அடையாளஎண் வழங்கும் சிறப்பு முகாம் ராமநாதபுர மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் கடந்த பிப்ரவரி 10-ந் தேதி நடைபெற்று வருகிறது. இந்த முகாமில் ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் பணிஒதுக்கீடு செய்யப்பட்ட வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை சார்ந்த கள அலுவலர்கள் மகளிர் திட்ட சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் கிராமங்களுக்கு வருகை தந்து விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாளஎண் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உத்தேசமாக 1 லட்சத்து 52ஆயிரத்து 808 விவசாயிகள் உள்ளனர். இத்திட்டத்தில், இதுவரை 87 ஆயிரத்து 218 விவசாயிகள்; மட்டும் அடையாள எண் பெற்றுள்ளனர். தற்பொழுது ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுசேவை மையங்களில் விவசாயிகள் தங்கள் நில உடமைகளை இலவசமாக பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளும் தங்கள் அருகில் உள்ள பொதுசேவை மையத்தை பயன்படுத்தி தங்களுடைய நேரடிப்பட்டா அல்லது கூட்டுப்பட்டா, ஆதார் அட்டை மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட அலைபேசியைக்; கொண்டு சென்று உடன் பதிவு செய்து பயன் பெற வேண்டும்.

ஒன்றிற்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் ஒரு கிராமத்தில் மட்டும் பதிவு செய்திருப்பின் மற்ற கிராமங்களிலும் உள்ள நில விபரங்களை ஏற்கனவே பதிவு செய்து பெறப்பட்ட அடையாள எண்ணுடன் இணைத்துக்கொள்ளலாம். மேலும் இச்செயலி மூலம் விவசாயிகளின் நில உடமைகள் மற்றும் இதர விபரங்களை விவசாயிகள் முன்னிலையில் சரிபார்த்து விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு விவசாயி அடையாளஎண் வழங்கப்படும்.

இவ்வாறு பதிவு செய்து பெறப்படும் தனித்துவ விவசாயி அடையாளஎண் மூலம் இனிவரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பயன்களை ஒற்றை சாளர முறையில் விவசாயிகள் பெறலாம். மேலும் மத்திய அரசு விவிசாயி அடையாள எண் வைத்திருக்கும் பி.எம்.கிசான் பயனாளிகளுக்கு மட்டும் அடுத்த தவணைத்தொகை விடுவிக்கப்படும் என தெரிவித்துள்ளது. எனவே, விவசாயிகளுக்கான அடையாள எண் பெறாத பி.எம்.கிசான் திட்ட பயானளிகள், மீனவ விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து விவசாயிகளும் தங்களுடைய கணினி பட்டா, ஆதார் எண் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி ஆகியவற்றுடன் தங்கள் அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ அல்லது வேளாண்மைமற்றும் உழவர் நலத்துறையினால் நடத்தப்படும் முகமாம்களிலோ வரும் 5-ந் தேதிக்குள் இலவசமாக பதிவு செய்து பயன் பெற்று கொள்ளலாம். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.மோகன்ராஜ் தெரிவித்துள்ளார்.

### ஒட்டன்சத்திரம் காப்பிலியபட்டி

# கல்வி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு சிறந்த கல்வி நிறுவன விருது




**ஒட்டன்சத்திரம், ஜூன் 29-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காப்பிலியபட்டி கல்வி மெட்ரிக்மேல்நிலைப்பள்ளிக்கு தேசிய யோகா சங்கம் யோகா துறையில் சிறப்பான சாதனை, சமூகத்திற்கான பங்களிப்பு மற்றும் கல்வி சேவைக்கு சிறந்த கல்வி நிறுவனம் என்றவிருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த கல்வி சேவைக்கான விருதினை சர்வதேச யோகா தினத்தன்று நடைபெற்ற விழாவில் பள்ளியில் துணை முதல்வர் செல்வி மங்கையர்கரசி, மூத்த ஒருங்கிணைப்பாளர் செல்வி சிலம்பரசி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

யோகாதுறையில் பள்ளி மாணவர்கள், முழுமையான வெற்றியை நோக்கி பயணிப்பதற்காகவும் மகத்தான வெற்றிக்கு வழிகாட்டியாக உறுதுணையாக ஊக்குவிக்கும் தலைவர், செந்தில்குமார், தாளாளர்,குமரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் வாழ்த்தி பாராட்டு தெரிவித்தனர். படம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காப்பிலியபட்டி கல்வி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு தேசிய யோகா சங்கம் சிறந்த கல்வி நிறுவனம் என்ற விருதை வழங்கியது.

# நத்தத்தில் நிறுத்தி வைத்திருந்த ஆட்டோ திருட்டு

**நத்தம், ஜூன் 29-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டுப்பட்டி-சின்ன மலையூரை சேர்ந்தவர் திருப்பதி (27). இவர் நேற்று முன்தினம் தனது ஆட்டோவில் மணக்காட்டூரில் இருந்து காய்கறிகளை ஏற்றி கொண்டு நத்தம் நல்லாகுளம் பகுதியில் உள்ள கமிஷன் கடைக்கு வந்தார்.அப்போது ஆட்டோவை வெளியில் நிறுத்தி வைத்து விட்டு காய்கறிகள் ஏலத்தில் கலந்து கொள்வதற்காக உள்ளே சென்றார். மீண்டும் ஏலம் முடிந்து வெளியே வந்து பார்த்த போது ஆட்டோவை காணவில்லை. இதுகுறித்து நத்தம் போலீசில் திருப்பதி புகார் செய்தார்.அதன் பேரில் சப் -இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# அருப்புக்கோட்டை: நகராட்சி இடத்தை ஆக்கிரமித்தவர் மீது நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

**அருப்புக்கோட்டை, ஜூன் 29-**

அருப்புக்கோட்டையில் நகராட்சி இடத்தை ஆக்கிரமித்தவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்தியதால் அங்கு பரபரப்பு நிலவியது.

அருப்புக்கோட்டை நகராட்சி 32 வது வார்டு தம்மாந் தெருவில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள முத்துமாரியம்மன் கோவில் அருகே நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அடிகுழாய் இருந்ததாகவும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அடிகுழாயை சிலர் அகற்றி அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், தற்போது மீண்டும் ஆக்கிரமிப்பை அகற்றி அதே இடத்தில் மீண்டும் அடிகுழாய் அமைத்து தர வேண்டும் என வலியுறுத்தி அப்பகுதியை சேர்ந்த பெண்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

மேலும் ஆக்கிரமிப்பை அகற்றி அப்பகுதியில் அடிகுழாய் அமைக்க வேண்டும் கோரிக்கை மனு அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்டு அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு அதற்கான உரிய தீர்வு காணப்படும் என்று கூறியதன் பேரில் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.இதனால் நகராட்சி வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.



விருதுநகர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் ரூ.40 லட்சம் செலவில் குளிரூட்டு வசதியுடன் கூடிய நவீன உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணியினையும், ஸ்டார் அகாடமி குத்துச்சண்டை விளையாட்டு மையப் பணிகளையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினரும் செயலருமான ஜெ.மேகநாதரெட்டி மற்றும் விருதுநகர் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா, ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

# கொடைக்கானலில் 'ரீல்ஸ்' மோகத்தில் சுற்றுலா பயணிகள் ஆபத்தான பயணம்

**கொடைக்கானல், ஜூன் 29-**

'ரீல்ஸ்' மோகத்திற்காக ஆபத்தான முறையில் பயணம் செய்வோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

'மலைகளின் இளவரசி' யான கொடைக்கானலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானோர் படையெடுத்து வருகின்றனர்.

தற்போதைய காலக்கட்டத்தில் சமூக வலைத்தளங்கள் அனைவரையும் கட்டிப்போட்டுள்ளது. அதிலும் தாங்கள் செல்லும் இடங்களை வீடியோ, புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிடுவதில் பொதுமக்கள் அதித ஆர்வம் காட்டுகின்றனர். அந்த வகையில் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகள் இயற்கை காட்சிகளை கண்டு மகிழ்வதுடன், அவற்றை புகைப்படம், வீடியோ எடுத்து தங்களது சமூக வலைதளத்தின் பக்கங்களில் பதிவிடுகின்றனர்.

இந்தநிலையில் சமீபகாலமாக கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளில் சிலர் மலைப்பாதையிலும், நகரின் முக்கிய சாலைகளில் செல்லும்போதும் வாகனங்களில் ஆபத்தான முறையில் பயணம் செய்கின்றனர். அதாவது கார், வேன் உள்ளிட்ட வாகனங்களின் மேற்கூரை மற்றும் ஜன்னல் பகுதியில் அமர்ந்தபடி பயணம் செய்வதுடன், சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதற்காக அதனை வீடியோ எடுத்து வருகின்றனர்.

'ரீல்ஸ்' மோகத்தில் சுற்றுலா பயணிகள் செய்யும் இதுபோன்ற செயலால் பிற சுற்றுலா பயணிகள், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான பூம்பாறை, மன்னவனூர் செல்லும் மலைப்பாதையில் இளைஞர்கள் சிலர் சொகுசு காரில் சென்றனர். அப்போது அவர்களில் 3 பேர் திடீரென காரின் இருபக்கமுள்ள ஜன்னலில் அமர்ந்தபடி ஆபத்தான முறையில் பயணம் செய்ததுடன், அதனை 'ரீல்ஸ்' வீடியோ எடுத்தனர்.

இதனால் அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் ஒருவித அச்சத்துடன் சென்றனர். மேலும் இளைஞர்கள் எடுத்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலானது. இதைத்தொடர்ந்து இளைஞர்கள் சென்ற வாகன பதிவெண்ணை வைத்து 2 பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் கொடைக்கானலில் இதுபோன்று ஆபத்தான முறையில் வாகனங்களை இயக்கும் வாகன ஓட்டிகள் மீதும், 'ரீல்ஸ்' மோகத்திற்காக ஆபத்தான முறையில் பயணம் செய்வோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பது இதுவரை இருந்ததில்லை: திண்டுக்கல்லில் முத்தரசன் பேட்டி

**திண்டுக்கல், ஜூன் 29-**

"தற்போது அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட யாரும் இல்லை. அவர்களின் கூட்டணி கேள்விக்குறியாகத் தான் இருக்கிறது" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் கூறியுள்ளார்.

திண்டுக்கல்லில் நேற்று (ஜூன் 28) செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "தமிழகத்தில் பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி தான் நடைபெறும். முதல்வராக அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் இருப்பார்கள். அது யார் என்பதை அவர்களே முடிவு செய்வார்கள் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அதன் மூலம், முன்னாள் முதல்வர் பழனிசாமியை அவர் முதல்வராக கூட ஏற்கவில்லை என்பது தெரிகிறது.

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பது இதுவரை இருந்ததில்லை. தொகுதி உடன்பாடுதான் இருந்திருக்கிறது. ஆட்சியில் பங்கு என்று மத்திய உள்துறை அமித்ஷா சொல்கிறார். அ.தி.மு.க.வுக்கு நெருக்கடி கொடுத்து பா.ஜ.க. தனது கூட்டணியில் சேர்த்திருக்கிறது. அந்தந்த மாநில கட்சிகளோடு கூட்டணி சேர்ந்து, அந்த கட்சியை காலி செய்வதுதான் பா.ஜ.க.வின் வழக்கம். தமிழகத்திலும் அப்படித்தான் பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி உருவாகியுள்ளது என்று முத்தரசன் கூறினார்.

# மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு தினம்



**மேலூர் ஜூன், 29-**

மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பட்டூர் நவ இந்தியா சைனிஷ் பள்ளியில் நடைபெற்றது. விழாவில் பள்ளி தாளாளர் ராஜூ வரவேற்புரையாற்றினார்.

மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரும், மேலூர் சார்பு நீதிமன்ற நீதிபதியுமான எம். சாமுண்டீஸ்வரி பிரபா பொதுமக்களுக்கு சட்டப் பணிகள் விழிப்புணர்வு குறித்து பேசினார். நீதிமன்றத்தில் இருந்து குற்ற வழக்கு அல்லது பிரச்சினை உங்கள் மீது வரும் போது அதனை எப்படி கையாளுவது அதற்கு தான் இந்த சட்ட விழிப்புணர்வு முகாம் பற்றி பொதுமக்களுக்கு அறிவுரைகளை வழங்க வந்திருக்கிறோம்.

இன்று நீதிமன்றத்தில் சராசரியாக நாள் ஒன்றுக்கு இரண்டு விவாகரத்து வழக்குகளுக்கு மேல் வருகிறது. அந்த காலத்தில் நாம் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம் இன்று தனிக்குடித்தனமாக சென்று வசித்து வருவதால் கணவன் மனைவி இருவருக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டு தகராறு ஏற்படுகிறது. முடிந்த அளவு பெரியவர்களிடம் முறையிட்டு தீர்வு கண்டோம். ஆனால்

இன்று காவல் நிலையம் போகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முடிந்த அளவு குடும்பத்தில் சமாதானமாக பேசிவாழ்ந்தால் நல்லது. அதற்கு எங்களது வட்ட சட்டப் பணிகளின் குழு உள்ளது. விபத்து சம்பந்தமாகவும், பட்டா, சிட்டா கிரிமினல் சம்பந்தமாகவும், மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். செல்போன் அதிக நேரம் பார்க்க கூடாது என்றும், போக்ஸோ , போதை பொருள் சட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி இவ்வாறு நீதிபதி சாமுண்டீஸ்வரி பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் எஸ்.ஜோதிமணி, துரைப் பாண்டியன், மண்டனம்பலம், வாஷிதா, அரசு வழக்கறிஞர் சபாபதி, அனைத்து வழக்கறிஞர்கள், காவல் துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை வட்ட சட்ட பணிகள் குழு அலுவலர்கள் கணேசமூர்த்தி, மாதாயீ, ஜெயபிரதா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

# ஈக்விடாஸ் எஸ்எப்பி மற்றும் ஏடல்வைஸ் லைஃப் இன்சூரன்ஸ் பாங்க்அஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது

**சென்னை, ஜூன் 29-**

ஈக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் மற்றும் ஏடல்வைஸ் லைஃப் இன்சூரன்ஸ், வாடிக்கையாளர்களுக்கான நிதிப் பாதுகாப்பை மேம்படுத்த, பாங்க்அஷ்யூரன்ஸ் கூட்டாண்மையை அறிவித்தன.இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஈக்விடாஸ் வங்கியின் பரந்த வாடிக்கையாளர் அடிப்படை, ஏடல்வைஸ் லைஃப் இன்சூரன்ஸ் வழங்கும் பாதுகாப்பு, சேமிப்பு, எண்டோவ்மென்ட் யூலிப் திட்டங்களை எளிதில் அணுக முடியும்.வங்கி வதந்திகளைப் பகிர்ந்த முரளி வைத்தியநாதன், வங்கியின் சேமிப்பு சேவைகள் வரம்பை விரிவுபடுத்தும் இந்த கூட்டாண்மை, வாடிக்கையாளர்களுக்கு முழுமையான நிதி தீர்வுகளை வழங்கும் என்றார். அனுப் சேத், ஏடல்வைஸ் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை விநியோக அதிகாரி, இந்த ஒத்துழைப்பு தெற்கு சந்தைகளில் நிறுவனத்தின் அடிப்படையை வலுப்படுத்தும் என்று கூறினார்.

இக்கூட்டாண்மை வாடிக்கையாளர்களின் நிதி நலனுக்காக, சேமிப்பு, முதலீடு மற்றும் பாதுகாப்பு சேவைகளை ஒரே கூரையில் வழங்கும் முழுமையான நிதி சூழலை உருவாக்குகிறது. தொலைநோக்குப் பார்வையுடன், இவை வாடிக்கையாளர்களின் வாழ்க்கைநிலை குறிக்கோள்களுடன் ஒத்திசைந்த சேவைகளை வழங்கும்.இரு நிறுவனங்களும் இணைந்து நம்பகமான ஆலோசனை,செல்வ வள உருவாக்கம் மற்றும் நிதிப் பாதுகாப்பை வலுப்படுத்தும் திட்டங்களை வழங்குவதில் தயாராக உள்ளன.இந்த ஒப்பந்தம், பணியாளர் நலன் மற்றும் நிதி உள்ளடக்கங்களை ஒருங்கிணைக்கும் புதிய முயற்சிக்கு முன்னோடியாகும்.

# ஏசியன் பெயிண்ட்ஸ் டிராக்டர் எமல்ஷன் 'வர்ணமாலை' வீடுகளை வண்ணமயமாக்கும்

**மதுரை, ஜூன் 29-**

80 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியர்களின் தலைமுறைகளை அவர்கள் விரும்பும் இருப்பிடங்களை உருவாக்குவதில் உதவிவரும் ஏசியன் பெயிண்ட்ஸை விட வேறு எந்த பிராண்டும் இதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியாது. நுகர்வோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும் பாரம்பரியத்தைத் தொடரும் ஏசியன் பெயிண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாட்டிற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான நிறங்களின் வழிகாட்டியான டிராக்டர் எமல்ஷன் "வர்ணமாலை"-யை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

வெளியீட்டு விழாவில் பேசிய நடிகைகள் சைத்ரா ரெட்டி, சுவாதி கொண்டே மற்றும் மனீஷா மகேஷ் ஆகியோர் ஷேட் கைடு பற்றிய தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர், "வர்ணமாலை ஒரு அழகான மற்றும் அற்புதமான சலுகை. உங்கள் வீட்டிற்கு சரியான வண்ணங்களைத் தேர்ந்தெடுப்பது முக்கியமானது, ஆனால் நாம் ஒவ்வொரு நாளும் பார்க்கும் தொலைக்காட்சி தொடர்கள் மூலம் சேர்க்கைகள் உயிர்ப்பிக்கப்படுவதைப் பார்ப்பது செயல்முறையை எளிமையாகவும் உண்மையானதாகவும் ஆக்குகிறது. இந்தப் பயணத்தை வழிநடத்தவும் ஏசியன் பெயிண்ட்ஸை விட சிறந்த பிராண்டை நாம் நினைக்க முடியாது. "

டிராக்டர் எமல்ஷன் வர்ணமாலை மூலம், ஏசியன் பெயிண்ட்ஸ் நிறுவனம் வீடுகளை வர்ணமயமாக்குவது மட்டுமல்லாமல் இந்திய நுகர்வோரின் வண்ணங்கள் பற்றிய பரிணாம வளர்ச்சிக்கும் மதிப்பளிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர், மாநிலம் முழுவதும் உள்ள ஏசியன் பெயிண்ட்ஸ் டீலர் விற்பனை நிலையங்களில் இந்த "வர்ணமாலை" புத்தகத்தை பெற்றுக்கொள்ளலாம் அல்லது 56161 என்ற எண்ணுக்கு "TRACTOR" என்று SMS அனுப்பி தங்களது நகலை வீட்டிற்கே நேரடியாக டெலிவரி பெற்றுக்கொள்ளலாம். வர்ணமாலை டிஜிட்டல் நகலை ஏசியன் பெயிண்ட்ஸ் வலைத்தளத்திலிருந்து அல்லது "ஏசியன் பெயிண்ட்ஸ் வர்ணமாலை" என்று ஆன்லைனில் தேடுவதன் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

# தொழில்துறைக்கான ஆட்டோமேஷன்தொழில்நுட்ப நவீனமயமாக்கலுக்கு புதிய ஸ்மார்ட் தீர்வுகள்

**மதுரை ,ஜூன் 29-**

இந்திய மின்சாரம் மற்றும் ஆட்டோமேஷன் துறையில் முன்னணி நிறுவனமான லாரிட்ஸ் நுட்சன் எலக்ட்ரிக்கல் அண்ட் ஆட்டோமேஷன் நிறுவனம், நாட்டின் முக்கிய தொழில்துறை மண்டலங்கள் மற்றும் வளர்ச்சி பகுதிகளுக்கான மின்சார பொருட்கள் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக அதன் மிகப்பெரிய தயாரிப்பு பிரிவை அறிமுகம் செய்துள்ளது. இந்த லட்சிய முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த பிராண்ட் நாடு முழுவதும் 30 தொழில்துறை நகரங்களில் தங்களின் பல்வேறு புதிய தயாரிப்புகள் குறித்து காட்சிப்படுத்த உள்ளது. -

மத்திய அரசின் விக்சித் பாரத் 2047 தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட்ட மற்றும் ஆற்றல்மிக்க இந்தியாவை உருவாக்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில் இந்த பிரச்சாரத்தை துவக்கி உள்ளது.இது குறித்து லாரிட்ஸ் நுட்சன் எலக்ட்ரிக்கல் அண்ட் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி நரேஷ் குமார் கூறுகையில், எங்களைப் பொறுத்தவரை வாடிக்கையாளர்கள் பாதுகாப்பாகவும், வேகமாகவும், புத்திசாலித்தனமாகவும் பணியாற்ற சிறந்த ஸ்மார்ட் தொழில்நுட்பங்களை வழங்குவதே எங்கள் நோக்கமாகும்.

இந்த தயாரிப்பு காட்சிப்படுத்தலின் மூலம், புதுமை அணுகக்கூடியதாகவும், தகவமைப்புக்கு ஏற்றதாகவும், இந்தியா முழுவதும் உள்ள ஒவ்வொரு பிராந்தியத்தின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். உதாரணத்திற்கு ராய்ப்பூரில் ஒரு அரிசி ஆலையை முழுமையான ஆட்டோமேஷன் ஆக்குவது, கோயம்புத்தூரில் ஒரு ஜவுளி ஆலைக்கு மின்சாரம் வழங்குவது அல்லது புனேவில் ஒரு ஆலையை நவீனமயமாக்குவது என எதுவாக இருந்தாலும், அதற்கான உடனடி தீர்வுகள் வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months thereafter. I, POORVASANDHIYA H D/o. HARIRAMAN aged 25 years Permanently Residing at No.2/1/63, North Street, Pachalur, Kodaikanal Taluk, Dindigul District, Tamil Nadu Pin : 624212. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu & Puducherry, High Court Building, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

POORVASANDHIYA H



திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புதிய சி.டி.ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவியை நேற்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். அருகில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## பூவை ஜெகன்மூர்த்தி தலைமறைவு?

# கைது செய்ய 4 தனிப்படைகள் அமைப்பு

**சென்னை, ஜூன் 29-**

பூவை ஜெகன்மூர்த்தி தலைமறைவானதாக தகவல் வெளியான நிலையில் அவரை கைது செய்ய 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மாவட்டம் களாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனுஷ், தேனியைச் சேர்ந்த விஜயஸ்ரீ காதல் திருமண விவகாரத்தில் தனுஷின் சகோதரரை கடத்தியது தொடர்பாக புரட்சி பாரதம் கட்சி தலைவரும், கே.வி.குப்பம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான பூவை ஜெகன்மூர்த்தியை போலீசார் தேடி வந்த நிலையில், அவர் முன்ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார் இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட், போலீஸ் விசாரணைக்கு ஆஜராகும்படி பூவை ஜெகன்மூர்த்திக்கு உத்தரவிட்டது. அதன்படி அவர் விசாரணைக்கு ஆஜரானார்.

இந்தநிலையில் பூவை ஜெகன்மூர்த்தியின் முன்ஜாமீன் மனு நீதிபதி ஜெயச்சந்திரன் முன்னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஜெகன்மூர்த்தி தரப்பில் ஆஜரான வக்கீல், 'மனுதாரருக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. சம்பவம் நடைபெற்ற அன்று மனுதாரர் திருமண நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்று விட்டார். கடத்தப்பட்டதாக கூறப்படும் சிறுவனையோ, காதல் திருமணம் செய்து கொண்ட



தம்பதியையோ மனுதாரர் பார்த்தது இல்லை. அரசியல் உள்நோக்கத்துடன் இந்த வழக்கில் மனுதாரரை சேர்த்துள்ளனர்.

சி.பி.சி.ஐ.டி போலீசாரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க மனுதாரர் தயாராக உள்ளார். எனவே, அவருக்கு முன்ஜாமீன் வழங்க வேண்டும்' என வாதாடினார். போலீசார் சார்பில் ஆஜரான வக்கீல், 'ஒட்டு மொத்த கடத்தல் சம்பவத்துக்கும் மூளையாக செயல்பட்டது பூவை ஜெகன்மூர்த்தி தான் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. போலீஸ் விசாரணைக்கு அவர் ஒத்துழைக்கவில்லை. அவரை கைது செய்து விசாரிக்க வேண்டியது உள்ளது. முன்ஜாமீன் வழங்கினால் சாட்சிகளை கலைத்து விடுவார்.

இந்த சம்பவத்தில் கூடுதல் டி.ஜி.பி. ஜெயராமிற்கு தொடர்பு உள்ளது. சம்பவத்தின்போது பூவை ஜெகன்மூர்த்தியும், ஜெயராமும் சந்தித்துள்ளனர். அதற்கு ஆதாரங்கள் உள்ளன. வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டு விசாரணை ஆரம்ப நிலையில் உள்ளது. தனது அலுவலக கார் கடத்தலில் பயன்படுத்தப்பட்டது என்பதை கூடுதல் டி.ஜி.பி.ஜெயராம் மறுக்கவில்லை. பூவை ஜெகன்மூர்த்திக்கும், கூடுதல் டி.ஜி.பி. ஜெயராமிற்கும் உள்ள தொடர்பு குறித்து விசாரிக்கப்பட வேண்டியது உள்ளது. எனவே, முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்' என வாதாடினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, 'சிறுவன் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்ட மகேஸ்வரி என்பவர் அளித்த வாக்குமூலம் மற்றும் செல்போன் உரையாடல்களில் இருந்து இந்த சம்பவத்தில் மனுதாரருக்கு தொடர்பு உள்ளது என்பதற்கு ஆரம்பகட்ட முகாந்திரங்கள் உள்ளன. மனுதாரரின் முன்ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது' என உத்தரவிட்டார். ஜெகன்மூர்த்தி மனு தள்ளுபடியான நிலையில் அவர் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதாக சொல்லப்பட்டது. இந்த நிலையில், எம்.எல்.ஏ. பூவை ஜெகன்மூர்த்தி தலைமறைவு ஆனதாக சொல்லப்படுகிறது. ஜெகன்மூர்த்தியை கைது செய்ய 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ராமதாஸ் மீது காங்கிரஸ், வி.சி.க.வுக்கு திடீர் பாசம்? அன்புமணி ராமதாஸ் கேள்வி

**சென்னை, ஜூன் 29-**

ராமதாஸ் மீது காங்கிரஸ் மற்றும் விசிகவுக்கு பாசம் ஏற்பட்டுள்ளதாக அன்புமணி ராமதாஸ் கூறினார்.

பாமக சமூக ஊடகப் பிரிவு கூட்டத்தில் தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டு பேசியதாவது;-

கடந்த 5 ஆண்டுகளாகவே பாமக நிறுவனர் ராமதாஸ் அவராகவே இல்லை. ராமதாசாக இருந்து எது கூறியிருந்தாலும் கண்களை மூடிக்கொண்டு செய்திருப்பேன். ராமதாசுக்கு பிறகு நான் தலைவராக வேண்டும் என அப்போதே முடிவெடுத்துவிட்டேன்.

12 ஆண்டுகளுக்கு முன்பு என்னை பாமகவின் தலைவராக இருக்குமாறு ராமதாஸ் கூறினார். ராமதாஸ் சொல்லித்தான் 2024ல் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தேன். அப்போதே சொல்லி இருந்தால் நான் ஏன் அதிமுக கூட்டணி வேண்டாம் என சொல்லப் போகிறேன்.

பாமக நிறுவனர் ராமதாஸ் மீது காங்கிரஸ் கட்சிக்கும், விசிகவுக்கும் திடீர் பாசம் ஏன்? என்றைக்குமே ராமதாசை பற்றி புகழ்ந்து பேசாத திருமாவளவன், தற்போது பேசுவது ஏன்? வி.சி.க.வின் வன்னிஅரசு, ரவிக்குமார், சிந்தனைச்செல்வனுக்கு ராமதாஸ் மீது திடீர் பாசம் ஏற்பட்டுள்ளது.

3 பேர் தங்களது சுயலாபத்துக்காக ராமதாசை பயன்படுத்தி கொள்கிறார்கள். வயது முதிர்வின் காரணமாக அவர் குழந்தையாக மாறி விட்டார்.

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter I, R.ABINAYA D/O RAKKAPPAN.M, AGED 22 YEARS, D.O.B 13/09/2002 and Permanently Residing at No:2/45, THIRUMANAPATHI, SAKKUDI POST, MADURAI 625020. intend having my enrollment an Advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar council Building, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

R.ABINAYA

தமிழ்நாடு அரசு

திருநெல்வேலி மாவட்டம், நாரணம்மாள்புரம் தேர்வுநிலை பேரூராட்சி

ந.க.எண்.193/ 2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 26.06.2025

நாரணம்மாள்புரம் தேர்வுநிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-26 திட்டத்தின் கீழ், ரூ.742.00 இலட்சம் மதிப்பீட்டில், நாரணம்மாள்புரம் பேரூராட்சி பகுதியில் குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in மற்றும் www.tenders.tn.gov.in என்ற இணையதளமுகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்தப்புள்ளி விபர முன் கூட்டம் | 10.07.2025 முற்பகல் 11.00 மணி |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளுதல் | 16.07.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 16.07.2025 மாலை 3.30 மணி வரை |

3) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்..

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
நாரணம்மாள்புரம்- 627357,
திருநெல்வேலி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 3313 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தலைவர்
தேர்வுநிலை பேரூராட்சி
நாரணம்மாள்புரம்- 627357,
திருநெல்வேலி மாவட்டம்.

உட்கோட்ட நிர்வாக நடுவர்
மற்றும்
வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம், அருப்புக்கோட்டை
10-2-/225/2025/-A6

த. கனக சபாபதி,
த/பெ. தங்கச்சாமி,
கிழக்கு தெரு,
சித்து மூன்றடைப்பு,
காரியாபட்டி வட்டம்
-----மனுதாரர்

-எதிர்-

1. வருவாய் வட்டாட்சியர்
அவர்கள், காரியாபட்டி
-----எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாத்தா இருவன் காம்பான் என்பவர் கடந்த 27-01-1952 தேதி மேற்படி விலாசத்தில் இறந்துள்ளார். அவரது இறப்பை எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரின் தாத்தா இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேராகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

. த.கனகசபாபதி
மனுதாரர்

மாண்புமிகு உட்கோட்ட நடுவர்
நீதிமன்றம் மற்றும் வருவாய்
கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.2422/2025/ஆ2

T.மாரியப்பன், த/பெ.தவசியப்பன்
No.6/392,காரியாபட்டி ரோடு
கள்ளிக்குடி, கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்

--- எதிர் ---

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
--------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான், எனது மகள் மா.திவ்யாஸ்ரீ, த/பெ.மாரியப்பன் என்பவர் கடந்த 10.03.1977-ம் தேதி கள்ளிக்குடி வட்டம்,கள்ளிக்குடியில் உள்ள எனது வீட்டில் வைத்து பிறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
T.மாரியப்பன்
கள்ளிக்குடி.

கனம் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், இராமநாதபுரம்
O.S.No.186 / 2024

மரியம் ஜமால் பாய்கா (பெ24)
.. வாதி

-எதிர்-

ஹமீது அஹமது சாலாஹுதீன்
(ஆ-28 )
.. பிரதி வாதி

அறிவிப்பு

மேற்படி நம்பர் அசல் வழக்கு எண் 186 OF 2024 -ல் மேற்கண்ட ஹமீது அஹமது சாலாஹுதீன் என்ற நபரை பிரதிவாதியாக சேர்த்து மேற்கண்ட அசல் வழக்கில் மேற்படி நபர்களுக்கெதிராக விவகரத்து பரிகாரம் கோரிக்கை தாக்கல் செய்யப்பபட்டும் வரும் 10.07.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் மேற்படி பிரதிவாதிக்கோ, அல்லது எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் வாய்தா தேதியன்று காலை 10:00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் மேற்படி அசல் வழக்கில் மேற்கண்ட பிரதிவாதிக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கபடும் என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

S.A.S.அலாவுதீன்,BE.,M.L.,
வழக்கறிஞர், இராமநாதபுரம்.

### உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியல்:
# முதல் 2 இடங்களில் ஆஸி, இங்கிலாந்து



**துபாய், ஜூன் 29-**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது. இதில் ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் முறையே 100 சதவீத புள்ளிகளுடன் முதல் 2 இடங்களில் உள்ளன.

**சுற்றுப்பயணம்....**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பார்படாசில் நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலிய அணி 159 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**2 இடங்களில்....**

இதனையடுத்து உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது. இதில் ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் முறையே 100 சதவீத புள்ளிகளுடன் முதல் 2 இடங்களில் உள்ளன. இதனையடுத்து தலா 33.33. சதவீத புள்ளிகளுடன் வங்காளதேசம் 3-வது இடத்திலும், இலங்கை 4-வது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் தோல்வியடைந்த இந்தியா இன்னும் புள்ளி கணக்கை தொடங்காமல் 5-வது இடத்தில் உள்ளது.

**புள்ளி கணக்கை...**

அதேபோல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தோல்வி கண்ட வெஸ்ட் இண்டீஸ் அணியும் இன்னும் புள்ளி கணக்கை தொடங்காமல் 6-வது இடத்தில் உள்ளது. இதில் இடம்பெற்றுள்ள மற்ற அணிகளான நியூசிலாந்து, பாகிஸ்தான், நடப்பு சாம்பியன் தென் ஆப்பிரிக்கா ஆகியவை 2025-27 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் சுழற்சியில் இன்னும் டெஸ்ட் போட்டிகளில் ஆடவில்லை. இதனால் அந்த அணிகளுக்கு இன்னும் புள்ளிகள் கொடுக்கப்படவில்லை.

### உஸ்பெகிஸ்தான் செஸ் போட்டி:
# பிரக்ஞானந்தா சாம்பியன்

**தாஷ்கண்ட், ஜூன் 29-**

உஸ்பெகிஸ்தான் மாஸ்டர்ஸ் கோப்பை செஸ் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டத்தை வென்றார்.

**10 சுற்றுகளின் முடிவில்...**

உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரில் இந்த மாஸ்டர்ஸ் கோப்பை செஸ் தொடர் நடைபெற்று வந்தது. இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி, ஆர்.பிரக்ஞானந்தா, அரவிந்த் சிதம்பரம் உட்பட உலகின் 10 முன்னணி வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்று விளையாடினர். இந்தப் போட்டியின் 10 சுற்றுகளின் முடிவில் பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசட்டோரவ், மற்றொரு உஸ்பெகிஸ்தான் வீரர் ஜவோகிர் சின்டரோவ் ஆகியோர் தலா 5.5 புள்ளிகளை பெற்று சமநிலையில் இருந்தனர். இதையடுத்து சாம்பியன் பட்டம் யாருக்கு என்பதை தீர்மானிக்க டைபிரேக்கர் ஆட்டம் நடத்தப்பட்டது.

**4-வது இடத்துக்கு முன்னேற்றம்...**

2 சுற்றுகளாக நடைபெற்ற டைபிரேக்கரில் 1.5 புள்ளிகளை பெற்று பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார். மேலும், சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு சுமார் ரூ.17 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த வெற்றியின் மூலம் சர்வதேச செஸ் தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள குகேஷை பின்னுக்கு தள்ளி 4-வது இடத்துக்கு பிரக்ஞானந்தா முன்னேறியுள்ளார். அவர் தற்போது 2778.3 புள்ளிகளைப் பெற்றுள்ளார். குகேஷ் 2776.6 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இதன் மூலம் வரலாற்றில் முதன் முறையாக தமிழகத்தைச் சேர்ந்த 2 வீரர்கள் முதல் 5 இடங்களுக்குள் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

### சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள
# விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லாவுடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடல்





**புதுடெல்லி, ஜூன் 29-**

சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள இந்தியாவின் குரூப் கேப்டன்சுபான்ஷூ சுக்லாவுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த வீடியோவில், "குரூப் கேப்டன்சுபான்ஷூ சுக்லா உடனான உரையாடல் அற்புதமாக இருந்தது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து அவர் தனது அனுபவங்களை என்னோடு பகிர்ந்துகொண்டார். அந்தச் சிறப்புக் கலந்துரையாடலை நீங்களும் பாருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரையாடலின் போது, "நீங்கள் இந்தியாவில் இருந்து வெகு தொலைவில் இருக்கிறீர்கள்... ஆனால், இந்தியர்களின் மனதில் மிக நெருக்கம் கொண்டுள்ளீர்கள். உங்களின் இந்த வரலாற்றுப் பயணம், விண்வெளி ஆய்வு மாணவர்களின் உத்வேகத்தைக் கூட்டும்" என்றுசுபான்ஷூ சுக்லாவிடம் பிரதமர் மோடி கூறினார்.

அப்போது, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமியை பார்க்கும் போது உணர்ந்த தருணத்தை பிரதமர் மோடியிடம் விவரித்தசுபான்ஷூ சுக்லா, "பூமி முழுவதும் எல்லைகள் ஏதுமின்றி ஒன்றாகத் தெரிகிறது. நாம் வரைபடத்தில் பார்ப்பதைக் காட்டிலும் இந்தியா மிகவும் பெரிதாகத் தெரிகிறது" என்று வியப்பு மேலிட பகிர்ந்தார்.

### தென் ஆப்பிரிக்கா தடுமாற்றம்

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி, ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி புலவாயே நகரில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி, பேட்டிங்கை தேர்வுசெய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய அந்த அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

தொடக்க வீரரான டோனி ரன் ஏதும் எதுக்காமல் ஆட்டமிழந்தார். பிரீட்ஸ்கே(13), வியான் மல்டர்(17), டேவிட் பெண்டிகம்(0), அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் அந்த அணி 56 ரன்களுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றம் கண்டது. பவுமா, மார்க்ரம், ஸ்டப்ஸ் போன்ற முன்னணி வீரர்கள் அணியில் இல்லாததால் அந்த அணிக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், ப்ரிட்டோரியஸ்-ப்ரெவிஸ் ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது. சமீபத்தில் நடந்த உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தென் ஆப்பிரிக்க அணி சாம்பியன் பட்டம் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

### தடகள வீராங்கனை சஸ்பெண்ட்

தடை செய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தியதாகத் தெரியவந்ததைத் தொடர்ந்து இந்திய தடகள வீராங்கனை ட்விங்கிள் சவுத்ரி சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். 28 வயதாகும் ட்விங்கிள் சவுத்ரி, இந்த ஆண்டு உத்தராகண்டில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டியின் 4x400 மீட்டர் மகளிர் தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்றிருந்தார். மேலும் 4x400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்திலும் வெண்கலமும், 800 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளியும் அவர் வென்றிருந்தார்.

இந்நிலையில் அவர் தடை செய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தியதாகக் கூறி தடகள ஒருங்கிணைப்புப் பிரிவு (ஏஐயு) அவரை சஸ்பெண்ட் செய்து நேற்று உத்தரவிட்டது. தடை செய்யப்பட்ட மெத்தில் டெஸ்டோஸ்டெரான் என்ற மருந்தை அவர் பயன்படுத்தியுள்ளார்.

சஸ்பெண்ட் உத்தரவைத் தொடர்ந்து, அவருக்கு ஏஐயு சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதையடுத்து விசாரணைக் குழு முன்பு ட்விங்கிள் சவுத்ரி ஆஜராகி தன்னிலை விளக்கத்தை அளிக்கவேண்டும் என்றும் ஏஐயு உத்தரவிட்டுள்ளது.

### பும்ராவை தொடர்ந்து
# 2-வது டெஸ்டில் இருந்து பிரசித் கிருஷ்ணா விலகல்



**லண்டன், ஜூன் 29-**

பும்ராவை தொடர்ந்து 2-வது டெஸ்டில் இருந்து பிரசித் கிருஷ்ணா விலகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**விக்கெட் வீழ்த்தவில்லை...**

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இதில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இந்த போட்டியின் முதல் இன்னிங்சில் பும்ரா 24.4 ஓவரில் 83 ரன்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தினார். 2-வது இன்னிங்சில் 19 ஓவர்கள் வீசினார். 57 ரன்கள் கொடுத்து விக்கெட் வீழ்த்தவில்லை.

**பயிற்சியில் ஈடுபடவில்லை...**

இங்கிலாந்துக்கு தொடர் தொடங்குவதற்கு முன்னதாகவே, 3 போட்டிகளில்தான் பும்ரா விளையாடிவார் என தெரிவிக்கப்பட்டது. முதல் டெஸ்டில் 43.4 ஓவர்கள் வீசிய பும்ரா, 2ஆம் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபடவில்லை. இதனால் எட்ஜ் பாஸ்டனில் வருகிற 2ஆம் தேதி தொடங்கும் 2ஆவது டெஸ்டில் அவருக்கு ஓய்வு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஓரங்கட்டப்படலாம்...**

அதேவேளையில் பிரசித் கிருஷ்ணாவும் பயிற்சி மேற்கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. இவர் முதல் இன்னிங்சில் 20 ஓவர்கள் வீசி 128 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார். 2-வது இன்னிங்சில் 15 ஓவர்கள் வீசி 92 ரன்கள் விட்டுக்கொடுத்து 2 விக்கெட் வீழ்த்தினார். 5 விக்கெட் வீழ்த்தினாலும் ஓவருக்கு சராசரியாக 6 ரன்களுக்கு மேல் விட்டுக்கொடுத்துள்ளார். இதனால் 2-வது டெஸ்டில் ஓரங்கட்டப்படலாம் எனத் தெரிகிறது.

**இந்தியா தோல்வியை...**

பும்ராவுடன் இவரும் 2வது டெஸ்ட்டில் இடம்பெறவில்லை என்றால் ஆகாஷ் தீப் மற்றும் அர்ஷ்தீப் சிங் ஆகியோர் அணியில் சேர்க்கப்படலாம் எனத் தெரிகிறது. இந்திய பேட்டர்கள் 5 சதங்கள் அடித்த நிலையிலும், 20 விக்கெட்டுகளை வீழ்த்த முடியாமல் இந்தியா தோல்வியை சந்தித்தது. இதனால் பந்து வீச்சில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம் ஆகும். முதல் டெஸ்டில் சிராஜ் மிகப்பெரிய அளவில் சாதிக்கவில்லை. பும்ரா இல்லாத நிலையில் பந்து வீச்சை வழிநடத்தும் சீனியர் வீரராக உள்ளார். இவர் நீக்கப்பட வாய்ப்பு மிகவும் குறைவுதான். 2ஆவது போட்டிக்கான இங்கிலாந்து அணியில் ஜாஃப்ரா ஆர்ச்சர் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 2-வது டெஸ்ட் போட்டி:
# வங்காளதேச அணிக்கு எதிராக இலங்கை இன்னிங்ஸ் வெற்றி

**கொழும்பு, ஜூன் 29-**

வங்காளதேசத்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இலங்கை இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

**சுற்றுப்பயணம்...**

வங்காளதேச கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் போட்டி சமனில் முடிந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொழும்பில் நடைபெற்றது.

**5 விக்கெட்டுகள்..**

இதில் டாஸ் வென்று பேட்டிங் செய்த வங்காளதேச அணி முதல் இன்னிங்சில் 247 ரன்னில் அடங்கியது. பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய இலங்கை அணி 116.5 ஓவர்களில் 458 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. பதும் நிசாங்கா 158 ரன்களும், குசல் மெண்டிஸ் 84 ரன்களும் எடுத்தனர். வங்காளதேசம் தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் 211 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய வங்காளதேச அணி மளமளவென விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 3-வது நாள் ஆட்ட நேரம் முடிவில் அந்த அணி 6 விக்கெட்டுக்கு 115 ரன்கள் அடித்திருந்தது.

**4-வது நாள் ஆட்டம்...**

இந்த சூழலில் 4-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த வங்காளதேச அணி மேற்கொண்டு 18 ரன்கள் அடித்த நிலையில் எஞ்சிய 4 விக்கெட்டுகளையும் இழந்து 133 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 78 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் தொடரையும் 1-0 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றி அசத்தியது. வங்காளதேசம் தரப்பில் அதிகபட்சமாக முஷ்பிகுர் ரஹீம் 26 ரன்கள் அடித்தார். இலங்கை தரப்பில் பிரபாத் ஜெயசூர்யா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை பதும் நிசங்கா கைப்பற்றினார்.

### டி.என்.பி.எல். 25-வது லீகில் தோல்வி:
# பிளே ஆஃப் வாய்ப்பை இழந்தது மதுரை

**திண்டுக்கல், ஜூன் 29-**

டி.என்.பி.எல். 25-வது லீக் போட்டியில் மதுரை பாந்தர்ஸ் அணியை சேப்பாக் அணி வீழ்த்தியதன் மூலம் பிளே ஆஃப் சுற்று வாய்ப்பை மதுரை அணி இழந்தது.

**25-வது போட்டி...**

தமிழ்நாடு பிரீமியர் லீக் 2025 சீசனின் 25-வது போட்டி திண்டுக்கலில் நடைபெற்றது. இதில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ்- மதுரை பாந்தர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற சேப்பாக் சூப்பர் கில்லீஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய மதரை பாந்தர்ஸ் 156 ரன்கள் சேர்த்தது, பின்னர். 157 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் களம் இறங்கியது. ஆஷிக், ஹரிகரன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஆஷிக் 17 பந்தில் 22 ரன்களும், ஹரிகரன் 17 பந்தில் 17 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

**அனைத்து லீக்கிலும்...**

பாபா அபராஜித் 12 பந்தில் 20 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 9.2 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 71 ரன்கள் எடுத்திருக்கும்போது, ஆட்டம் தடைபட்டது. பின்னர் ஆட்டம் தொடங்கியபோது, 14 ஓவரில் 114 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. என். ஜெகதீசன் 10 பந்தில் 18 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். விஜய் சங்கர் ஆட்டமிழக்காமல் 17 பந்தில் 28 ரன்கள் அடிக்க சேப்பாக் சூப்பர் கில்லீஸ் 12.5 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 114 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் தான் விளையாடிய அனைத்து லீக் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. மதுரை பாந்தர்ஸ் 7 போட்டிகளில் 2-ல் மட்டும் வெற்றி பெற்று பிளே ஆஃப் சுற்று வாய்ப்பை இழந்தது.

# மத்தியில் ஆள்பவர்களுக்கு தமிழகம் என்றாலே அலர்ஜி
### ஆதவ் அர்ஜுனா அறிக்கை

**சென்னை, ஜூன் 29-**

தமிழ்நாடு என்றாலே மத்தியில் ஆள்பவர்கள்தான் என்று ஆதவ் அர்ஜுனா கூறினார். த.வெ.க தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

பீகார் மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில், கடந்த 24.06.2025 அன்று இந்தியத் தேர்தல் ஆணையம், 'சிறப்புத் தீவிரத் திருத்தம் என்ற ஒன்றைப் பீகாரில் முன்னெடுக்கப் போவதாக அறிவித்தது. அதன்படி, தேர்தல் ஆணைய அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, வாக்காளர்களின் ஆவணங்களை, தனிப்பட்ட விவரங்களைச் சரிபார்த்து, வாக்காளர் பட்டியலை இறுதி செய்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படிச் செய்வதன் மூலம் விடுபட்ட வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும்; தகுதியற்ற வாக்காளர்களின் பெயர்களை நீக்க முடியும்; வெளிப்படைத்தன்மையோடு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க முடியும்' என்று இந்தியத் தேர்தல் ஆணையம் காரணம் சொல்கிறது.

ஆனால், பீகார் மாநிலச் சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் நான்கு மாதங்களே உள்ளன. அடுத்த ஆண்டு, தமிழ்நாடு உள்ளிட்ட மேலும் சில மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில், அவசர அவசரமாகத் தேர்தல் ஆணையம் இப்படிப்பட்ட முடிவை எடுத்திருப்பது பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது. ஏனெனில், கடைசியாக பீகாரில் 2003-ஆம் ஆண்டுதான் இந்தச் சிறப்புத் தீவிரத் திருத்தத்தின்படி வாக்காளர் பட்டியல் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு, கடந்த 22 ஆண்டுகளில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் பலவும் நடந்து முடிந்துவிட்டன.

இதில், கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலின்போது பதிவான வாக்கு சதவீதம் 69.72%. தேசிய சராசரியைவிட இது மூன்றரை சதவீதம் அதிகம். ஆனால், இந்தச் சிறப்புத் தீவிரத் திருத்தம் அடுத்தபடியாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டால் இந்த வாக்கு சதவீதம் குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏற்கனவே, தமிழ்நாடு என்றாலே மத்தியில் ஆள்பவர்களுக்கு அலர்ஜி. இந்தத் திருத்தத்தைக் காரணமாக வைத்து மதச் சிறுபான்மையினர், ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினச் சமூகத்தினர் ஆகியோரின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்க நினைத்தால், அதற்குத் தமிழக வெற்றிக் கழகம் கடுமையாக எதிர்வினையாற்றும்.

ஜனநாயகத்தின் மாண்பைக் கேள்விக்கு உள்ளாக்கும் இந்தப் புதிய திருத்தத்திற்குப் பதிலாக, நடைமுறையில் இருக்கும் திட்டத்தின்படியே செயல்பட, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் அவர்களது அறிவுறுத்தலின்படி தேர்தல் ஆணையத்தை வலியுறுத்துகிறோம். அரசியல் வேற்றுமைகளைப் புறந்தள்ளி, இந்த விவகாரத்தில் இந்திய அரசியல் அமைப்பைக் காக்க, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 72,081 வீடுகள் கட்டப்பட்டுள்ளன
### தமிழ்நாடு அரசு தகவல்

**சென்னை, ஜூன் 29-**

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்படி, 2024-25 மற்றும் 2025-26 ஆகிய 2 ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகள் கட்ட ரூ.7,000 கோடி அனுமதிக்கப்பட்டு 72,081 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. தேவைப்படும் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூ. 1 லட்சம் வரை கடன் உதவி வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளாட்சிகள் சுதந்திரமாகச் செயல்படவும், குறித்த காலத்தில் திட்டங்களை நிறைவேற்றி மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவும் உதவும் விதமாக உள்ளாட்சிகளின் நிதி நிருவாக அனுமதி வரம்புகளை உயர்த்தியுள்ளார். உள்ளாட்சி அமைப்புகள் சுயமாகச் செயல்படவும், மேலிட அனுமதிகளைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்திடவும் கிராம ஊராட்சிகளுக்கு நிருவாக அனுமதி அளிக்கும் வரம்பு ரூ.2 லட்சம் என்பதை ரூ.5 லட்சம் ஆகவும், வட்டார ஊராட்சிக்கான அனுமதி வரம்பு ரூ.10 லட்சம் என்பதை ரூ.20 லட்சம் ஆகவும், மாவட்ட ஊராட்சிகளுக்கான அனுமதி வரம்பு ரூ.20 லட்சம் என்பதை ரூ.50 லட்சம் ஆகவும் உயர்த்தி வழங்கிப் பணிகளை விரைந்து நிறைவேற்ற ஊக்கமளித்துள்ளார்.

நகரங்களை ஒட்டிய 690 ஊராட்சிகள், 278 மலைப்புர ஊராட்சிகள் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட சிறப்பு மானியம்: தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களை ஒட்டியுள்ள 690 ஊராட்சிகளுக்கு, தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.69 கோடியும் மலைப்பிரதேசங்களிலுள்ள 278 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.30 கோடியும் சிறப்பு மானியமாக வழங்கப்பட்டு இந்த ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 2030-ம் ஆண்டுக்குள் குடிசையில்லாத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற உன்னதக் குறிக்கோளுடன் கிராமப்புறங்களில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக 8 லட்சம் கான்கீரிட் வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த வீடுகள் ஒவ்வொன்றுக்கும் திராவிட மாடல் அரசு ரூ.3,50,000 தொகையை பயனாளிகளுக்கு மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்படி 2024-25 மற்றும் 2025-26 ஆகிய 2 ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகள் கட்ட ரூ.7,000 கோடி அனுமதிக்கப்பட்டு 72,081 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. தேவைப்படும் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூ. 1 லட்சம் வரை கடன் உதவி வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டத்தின் கீழ் 2000-2001 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள ஓடுகள் மற்றும் சாய்தள கான்கிரீட் கூரை வீடுகளைப் பழுதுபார்க்கும் பொருட்டு, 2024-2025 ஆம் ஆண்டில் ரூ. 1041.32 கோடி மதிப்பீட்டில் 1,48,634 வீடுகளைச் சீரமைத்திட திராவிட மாடல் அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. இதுவரையில் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதில் 1,03,177 வீடுகள் சீரமைக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் 2000-01 ஆம் ஆண்டிற்கு முன்னர் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு தற்போது பழுது பார்க்க முடியாத நிலையில் உள்ள ஓடுகள் மற்றும் சாய்தள கான்கிரீட் கூரை வீடுகளுக்கு மாற்றாக 210 ச.அடி பரப்பளவில் மறுகட்டுமானம் செய்திடும் பொருட்டு வீடு ஒன்றிற்கு ரூ.2.40 லட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாளது வரை 15,485 எண்ணிக்கை வீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு வருகிறது.

சமத்துவபுரங்களில் பழுதுபட்ட குடியிருப்புகள் முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் ரூ.261.17 கோடி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன. விழுப்புரம் மாவட்டம், கொழுவாரி சமத்துவபுரம் , சிவகங்கை மாவட்டம், கோட்டை வேங்கன்பட்டி சமத்துவபுரம் புதுப்பிக்கப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அதேபோல, திருவள்ளூர் மாவட்டம் இராமசமுத்திரம், திருச்சி மாவட்டம் காட்டுக்குளம், கடலூர் மாவட்டம் தொளார் ஆகிய இடங்களில் சமத்துவப்புரக் குடியிருப்புகளின் கட்டுமானங்கள் முடிவுற்று முதல்வரால் திறந்து வைக்கப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. தற்போது, பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் 8 இடங்களில் புதிய சமத்துவபுரங்கள் அனுமதிக்கப்பட்டு 800 வீடுகள் கட்டுமான பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களுக்கு திராவிட மாடல் அரசு 70 சதவீதம் மத்திய அரசு 30 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்து 300 சதுர அடி கொண்ட வீடு கட்டுவதற்குச் சமதளப் பகுதியில் ரூ.5.07 லட்சம், மலைப்பகுதிகளில் ரூ.5.73 லட்சம் எனத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 11,875 வீடுகள் அனுமதிக்கப்பட்டதில் இதுவரை 2,751 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு எஞ்சிய வீடுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மொத்தம் 7,429 வீடுகள் கட்டுவதற்கு ரூ.419.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாளதுவரை 4,478 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,951 வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

### நீரஜ் சோப்ரா முதலிடம்

ஈட்டி எறிதலில் வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் உலக சாம்பியனும், ஒலிம்பிக்கில் 2 பதக்கம் வென்றவருமான இந்தியாவின் நீரஜ் சோப்ரா 1445 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்தை பிடித்து அசத்தியுள்ளார்.

இதனையடுத்து 1431 புள்ளிகளுடன் கிரெனேடியாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 2-வது இடத்திலும், 1407 புள்ளிகளுடன் ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 3-வது இடத்திலும், ஒலிம்பிக் சாம்பியனான பாகிஸ்தானின் அர்ஷ்தீப் நதீம் 1370 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும் உள்ளனர்.

### பும்ராவாவுக்கு சோப்ரா பாராட்டு

இந்தியாவின் முன்னணி ஈட்டி எறிதல் வீரராக நீரஜ் சோப்ரா உள்ளார். இவர் ஒலிம்பிக்கில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். கிரிக்கெட் வீரர்களில் யார் ஈட்டி எறிதல் போட்டியில் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது என இவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பும்ரா ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது. முழு உடற்தகுதியின் இருந்தால் பும்ராவால் ஈட்டி எறிதல் போட்டியில் சாதிக்க முடியும் என நினைக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. நான்காம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரம்: அமைச்சர் பங்கேற்பு



**ஒட்டன்சத்திரம். ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி ஒன்றியம், கோட்டத்துறை, கீரனூர் ஆகிய பகுதிகளில் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் நான்காம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமை வகித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின் அறிவிக்கப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

மேலும் நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் பொன்ராஜ், சுப்பிரமணி, கீரனூர் பேரூர் செயலாளர் அன்பு (எ)காதர்பாட்ஷா, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், இளைஞர் அணி நிர்வாகிகள் நூருல்லா, அருண்குமார், மாரிமுத்து உள்ளிட்ட முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## அருப்புக்கோட்டையில் ராம்ராஜ் காட்டன் ஷோரூம்:
# அமைச்சர் திறந்து வைத்தார்



**அருப்புக்கோட்டை, ஜூன் 28-**
அருப்புக்கோட்டை திருச்சுழி சாலை மரக்கடை பஸ் நிறுத்தத்தில் ராம்ராஜ் காட்டன் ஷோரூம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஷோ ரூமை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

இதில் கோமதி மருத்துவமனை மருத்துவர்கள் ரவிசங்கர், சித்ரா ரவிசங்கர், பங்கஜம் குரூப்ஸ் ராஜ்குமார் குத்து விளக்கேற்றினர். ஜெயா ரோடு வேய்ஸ் ஜெயகுமார், குயின்ஸ் குரூப் கம்பெனி நிறுவனர் தங்கப்பாண்டியன் முதல் விற்பனையை பெற்றுக் கொண்டனர்.

## அருப்புக்கோட்டையில்
# மீனாட்சி சொக்கநாதர் கோவில் ஆனி பிரம்மோற்சவ விழா கொடியேற்றம்



**அருப்புக்கோட்டை, ஜூன் 29-**
அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவில் அமைந்துள்ளது. பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த இத்திருக்கோவில் ஆனி பிரமோற்சவ விழா வெகுவிமர்சையாக நடைபெறுவது வழக்கம்.கொடியை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கொடிமரத்தில் கொடி ஏற்றப்பட்டது. முன்னதாக கொடிமரத்திற்கு பல்வேறு வகையான அபிசேகங்கள் நடைபெற்றது.

கொடியேற்றத்தை முன்னிட்டு மீனாட்சி சொக்கநாதர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார். கொடி மரத்திற்கும், உற்சவர் மற்றும் மூலவருக்கும் சிறப்பு தீப ஆராதனைகள் நடைபெற்றது. இந்த கொடியேற்ற விழாவில் அருப்புக்கோட்டை ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் சுப்பாராஜ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் விஜயகுமார், கோயில் செயல் அலுவலர் தேவி, நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, நகர கழக செயலாளர் ஏ.கே.மணி, தொழிலதிபர்கள் கணேசன், முருகன் அருப்புக்கோட்டை டவுன் காவல் ஆய்வாளர் பாலமுருகன்,மற்றும் மண்டா படிகாரர்கள், பொது மக்கள் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாண வைபவம் வரும் ஜுலை 7 ஆம் தேதியும், ஜுலை 8 ஆம் தேதி தேரோட்டமும் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடலில் மூழ்கிய ராமேசுவரம் படகை இலங்கை கடற்படையினர் மீட்டனர்

**ராமேசுவரம், ஜூன் 29-**
கடலில் மூழ்கிய ராமேசுவரம் படகை இலங்கை கடற்படையினர் மீட்க உதவினர்.

ராமேசுவரம் அருகே உள்ள தனுஷ்கோடி பகுதியில் இருந்து 2 நாட்களுக்கு முன்பு நாட்டுப்படகில் பிரகாஷ், சதீஷ், குகன், நம்பு பிரகாஷ் ஆகிய 4 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். நடுக்கடலில் மீன் பிடித்தபோது பலத்த சூறாவளி காற்று மற்றும் கடல் சீற்றத்தால் படகு கடலில் மூழ்கியது.கடலில் தத்தளித்த மீனவர்களை அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீட்டனர்.

கடலில் மூழ்கி கிடக்கும் அந்த படகை மீட்பதற்காக ராமேசுவரத்தில் மீன் துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று 3 நாட்டுப்படகுகளில் மீனவர்கள் சென்றனர். அந்த படகை மீட்க முடியாமல் திணறினர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மூழ்கிய படகை மீட்பதற்கு உதவி செய்தனர். மீட்கப்பட்ட படகுடன் ராமேசுவரம் மீனவர்கள் பாதுகாப்பாக கரை திரும்பினர். இலங்கை கடற்படையினரின் இந்த செயல் மீனவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. படகு மீட்கப்பட்டாலும் படகின் என்ஜின் பெரிய அளவில் சேதம் அடைந்ததால், அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சமுதாய கழிப்பறையில் தீ விபத்து



**நத்தம், ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் காமராஜர் நகரில் சமுதாய கழிப்பறை ஒன்று உள்ளது.இந்த கழிப்பறையில் உள்ள மின்சாதன பெட்டியில் நேற்று காலை மின்கசிவு ஏற்பட்டு திடீரென வெடிச்சத்தது டன் புகை கிளம்பியது. இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் நத்தம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் அங்கு சென்ற தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட தீயணைப்பு வீரர்கள் அரைமணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் மின்சாதன பெட்டி முற்றிலும் தீயில் கருகி சேதமடைந்தது. மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில்
# சமூகத்தில் பின்தங்கிய பெண்களுக்கு சிறப்பு திட்டம்

**ராமநாதபுரம், ஜூன் 29-**
ராமநாதபுரம் மாவட்டத்தில் சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரான கைம்பெண்கள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார ரீதியாக அவர்களை வலுப்படுத்தவும் ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரான கைம்பெண்கள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மகளிரின் பொருளாதார சவால்களைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார ரீதியாக அவர்களை வலுப்படுத்தவும் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 2025-2026 -ஆம் நிதியாண்டிற்காக, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், ரூ.10 ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள உலர் மற்றும் ஈரமாவு அரைக்கும் வணிக ரீதியிலான இயந்திரங்கள் வாங்கும் போது, மொத்த விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.5ஆயிரம் மானியத் தொகையாக வழக்கப்படும். இத்திட்டத்தில், கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இந்த மானியத்n தாகை வாங்க விண்; ணப்பிக்க தேவையான சான்றுகளை இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் தகுதியுள்ள மகளிர் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

இதன்படி மனுதாரர் தமிழ்நாட்டில் பூர்வீகமாக வசிப்பவராக இருக்க வேண்டும். (பிறப்பிடச் சான்று). வயது வரம்பு - 25 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும். பிறந்த தேதிக்கான சான்று. திட்டத்தில் முன்னுரிமை பெற வேண்டுமானால் கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்பதற்கான சான்று (வட்டாட்சியரிடம் பெறுதல் வேண்டும்) சமர்ப்பிக்க வேண்டும். ஆண்டு வருமான வரம்பு ரூ.1,20,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். (வருமானச் சான்று வட்டாட்சியரிடமிருந்து பெறுதல் வேண்டும்). எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவர்கள் தங்களது விண்ணப்பங்கள் 23.06.2025 முதல் 14.07.2025-க்குள், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் செயல்படும் மாவட்ட சமூக நல அலுவலகம், கருவூலகக்கட்டிடத்தில் முதல் மாடியில் உள்ள அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இத்திட்டத்திற்கு தகுதியுள்ள பயனாளிகள் அரசால் நியமிக்கப்பட்ட தேர்வு குழுவால் தெரிவு செய்யப்படுவர். இதர விவரங்களுக்கு 04567 - 230466 மாவட்ட சமூக நல அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

# சேவுகம்பட்டி பேரூராட்சி மாதாந்திர வளர்ச்சி கூட்டம்



**வத்தலகுண்டு, ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம் எம்.வாடிப்பட்டியில் உள்ள பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன் தலைமை தாங்கினார்.

துணைத்தலைவர் தெய்வராணிவிஜயன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ் பாபு வரவேற்றார். இக்கூட்டத்தில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 6வது வார்டு எம்.வாடிப்பட்டியில் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாயவிலைக்கடை அமைத்தல், அயோத்தி தாஸ்பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 15 வது வார்டு கொன்னம்பட்டியில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய கூடம் அமைத்தல், பொதுநிதியின் கீழ் ரூ.29.60 லட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சி அலுவலகத்தில் கூடுதல் கட்டிடம், சேமிப்பு அறை மற்றும் வரிவசூல் அறை கட்டுதல், 8வது வார்டு வளம் மீட்பு பூங்காவில் ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலை அமைத்தல், 12-வது வார்டு அண்ணா நகரில் 6 மற்றும் 7வது குறுக்குத் தெருவில் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல், 11வது நாகலாபுரம் அழகர் நகரில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் உள்ளிட்ட 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

# தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு



**திருமங்கலம். ஜூன் 29-**
மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே தோப்பூர் பகுதியில் அமைந்துள்ள அரசு காசநோய் மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னையில் இருந்து சாலை மார்க்கமாக திண்டுக்கல்லில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேற்று காலை வந்தார். அப்போது மதுரை திருமங்கலம் அருகே தோப்பூரில் அமைந்துள்ள அரசு காசநோய் மருத்துவமனையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் திடீரென ஆய்வு மேற்கொண்டார். அப்போது காசநோய் மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை பார்வையிட்டார். மேலும் காசநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிடம் நலம் விசாரித்ததுடன் மருத்துவ அதிகாரிகளிடம் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். இதனை தொடர்ந்து உணவு தயாரிக்கும் பகுதியை ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளுக்கு வழங்கப்படும். சூப் மற்றும் உணவினை சுவை பார்த்தார். அப்போது அந்த பகுதி சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருப்பதை சுட்டிக்காட்டி இந்த முறையை தொடர்ந்து பின்பற்றிடுமாறு பாராட்டு தெரிவித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் திண்டுக்கல்லுக்கு புறப்பட்டு சென்றார். தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீரென ஆய்வு மேற்கொண்ட நிகழ்வு மருத்துவ வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படு வருகிறது.

## திருமங்கலம் தொகுதியில்
# புதிதாக 1 லட்சம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்: மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேச்சு



**திருமங்கலம். ஜூன் 29-**
திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் செய்து 1லட்சம் பேரை தி.மு.க உறுப்பினர்களாக சேர்த்திட வேண்டும் என திருமங்கலத்தில் நடைபெற்ற பாக முகவர் மற்றும் ஐ.டி.விங் பாக பொறுப்பாளர்கள் பயிற்சி கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசினார்.

தமிழ்நாடு முதல்வர்,கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் கீழ் மதுரை தெற்கு மாவட்டம்,திருமங்கலம் சட்டமன்ற தொகுதியின் தி.மு.க பாக முகவர்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணியின் பாகப் பொறுப்பாளர்கள் பயிற்சி கூட்டம் கொடி அரங்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க ஐ.டி.விங் ஒருங்கிணைப்பாளர் ஜெயச்சந்திரன் முன்னிலை வகித்து வரவேற்றார். திருமங்கலம் தொகுதியின் பாக முகவர்கள் மற்றும் ஐ.டி.விங் பாகப் பொறுப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கலந்து கொண்டு தலைமையேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றி ஐ.டி.விங் மற்றும் கட்சி நிர்வாகிகளிடம் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பபடிவங்களை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:-

ஜூலை 1ம் தேதி முதல் ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் மாநிலம் முழுவதிலும் தி.மு.க உறுப்பினர் சேர்க்கை நடைபெற உள்ளது.தமிழ்நாடு முதலமைச்சரின் ஓரணியில் தமிழ்நாடு செயல் திட்டத்தின் கீழ் வீடு வீடாகச் சென்று தி.மு.க அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி அவர்களை கட்சியில் உறுப்பினர்களாக சேர்த்திட வேண்டும்.இதற்கு 40 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.திருமங்கலம் தொகுதியில் 30சதவீதம் கூடுதலாக என 84ஆயிரம் பேரை கழக உறுப்பினர்களாக்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் நாம் 50 சதவீதம் கூடுதலாக என 1லட்சம் பேரை புதிதாக சேர்த்து சாதனை படைத்திட வேண்டும்.டிஜிட்டல் மற்றும் ஆன்லைன் முறை இருந்தாலும் திருமங்கலம் தொகுதி முழுவதும் வீடு வீடாகச் சென்று மக்களை நேரில் சந்தித்து தி.மு.க அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி திண்ணைப் பிரச்சாரம் மூலம் புதிதாக 1லட்சம் பேரை தி.மு.க உறுப்பினர்களாக்கி 2026 தேர்தலில் திருமங்கலத்தில் தி.மு.க.வின் வெற்றியை உறுதி செய்திட வேண்டும்.நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தாண்டி 50சதவீதம் அதிகளவு புதிய உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்திடும் நிர்வாகிகளுக்கு தங்கச்சங்கிலி, தங்கமோதிரம் பரிசாக வழங்கப்படும் என்று பேசினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ லதாஅதியமான்,மாவட்ட அவைத்தலைவர் நாகராஜன்,தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்துராமன்,ஞானசேகரன்,பொதுக்குழு உறுப்பினர்கள் ஆதிமூலம், சிவமுருகன், ஒன்றியச் செயலாளர்கள் மதன்குமார், ராமமூர்த்தி, தனபாண்டியன், சண்முகம், தங்கப்பாண்டியன், பாண்டியன், நாகராஜ், தனசேகர், திருமங்கலம் நகர் செயலாளர் ஸ்ரீதர்,பேரூர் செயலாளர்கள் வருசை முகமது, முத்துகணேசன், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான் மற்றும் கட்சி நிர்வாகிகள், திருமங்கலம் தொகுதி நகர, ஒன்றியபேரூர் ஐ.டி.விங் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ரெட்டியபட்டியில் உழவரைத்தேடி உழவர் நலத்துறை சிறப்பு முகாம்



**ஒட்டன்சத்திரம். ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் ரெட்டிபட்டியில் வேளாண்மை உழவர் நலத்துறையில் உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்பு முகாம் ஒட்டன்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சிவராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை சிறப்பு முகாம் ஒழுங்குமுறை கூட்டத்தின் திட்டங்கள், செயல்பாடுகள், வசதிகள் இ.நாம் திட்டங்கள்பற்றி விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது .

இக்கூட்டத்தில் மண்டி ஆய்வாளர் அசோக் குமார் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி




சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.



சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் நேற்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியை கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜெயசுதர்ஷன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### 'உடன்பிறப்பே வா' நிகழ்ச்சி மூலம்

# 3 மாவட்ட தொகுதி நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, ஜூன் 29-

'உடன்பிறப்பே வா' நிகழ்ச்சி மூலம் மேட்டுப்பாளையம், அந்தியூர், மொடக்குறிச்சி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது தி.மு.க.வை மீண்டும் வெற்றி பெற செய்ய அனைவரும் உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை சந்திப்பதற்கு அனைத்து கட்சிகளும் தயாராகி வருகின்றன. அந்த வகையில் தமிழக முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க ஸ்டாலின் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியில் அமர வேண்டும் என்கிற எண்ணத்தோடு செயலாற்றி வருகிறார்.

இதற்காக அனைத்து தொகுதிகளிலும் கட்சியினரை ஊக்கப்படுத்தி பணியாற்ற செய்யும் விதமாக 'உடன்பிறப்பே வா' என்கிற தலைப்பில் நேருக்கு நேர் சந்திப்பு நிகழ்ச்சியை அவர் நடத்தி வருகிறார். கடந்த 13-ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சி அவ்வப்போது சிறிய இடைவெளி விட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முதல் நாள் அன்று சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் உடன்பிறப்பே வா நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதனை தொடர்ந்து இதுவரை 18 தொகுதி நிர்வாகிகளை நேரில் அழைத்துப் பேசி அவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முக்கிய ஆலோசனையை மேற்கொண்டு உள்ளார். இந்த நிலையில் நேற்று மேட்டுப்பாளையம், அந்தியூர், மொடக்குறிச்சி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகளுடன் முதல்வர்மு.க. ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார்.

நேற்றைய கூட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகளிடமும் தொகுதிகளில் உள்ள நிலவரங்களை அவர் கேட்டறிந்தார். நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த தொகுதிகளின் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர். இவர்களோடு தனித்தனியாக ஆலோசனை நடத்திய முதல்வர்மு.க ஸ்டாலின் உங்களது தொகுதியில் அரசின்நலத்திட்ட பணிகள் முழுமையாக சென்றடைந்துள்ளதா?

நமது கட்சிக்கு வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது? உள்ளூர் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு இருக்கிறதா? மாவட்ட நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு அளிக்கிறார்களா? என்பது போன்ற கேள்விகளைக் கேட்டுள்ளார். இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகள் மொடக்குறிச்சி, மேட்டுப்பாளையம், அந்தியூர் ஆகிய 3 தொகுதிகளிலும் உள்ள கள நிலவரங்களை முதல்வரிடம் எடுத்து கூறி இருக்கிறார்கள்.

முதல் கட்டமாக 75 முக்கிய தொகுதிகளை தேர்வு செய்து அந்த தொகுதி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த திட்டமிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்றுடன் 21 தொகுதி நிர்வாகிகளுடன் கலந்துரையாடி இருக்கிறார். மீதமுள்ள 54 தொகுதி நிர்வாகிகளையும் வருகிற செப்டம்பர் மாதத்துக்குள் அழைத்து பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டு உள்ளது.

ஒவ்வொரு மாவட்ட நிர்வாகிகளுடன் ஒரு மணி நேரத்துக்கும் குறையாமல் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது. அரசின் நலத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்து தி.மு.க.வை மீண்டும் வெற்றி பெற செய்ய அனைவரும் உழைக்க வேண்டும் என்று இந்த ஆலோசனைக் கூட்டங்களின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# ஜூலை 1 முதல் தொடங்குகிறார்... (1-ம் பக்க தொடர்ச்சி)

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவில் வேறெந்த இயக்கமும் செய்யாத அளவில் 68 ஆயிரத்துக்கும் அதிகமான டிஜிட்டல் வீரர்கள் கொண்ட கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

கழகத்தின் தொண்டர்கள் தமிழ்நாட்டு மக்களைக் கொண்டு ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைப்பார்கள். இந்த செயல்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கிட (நேற்று ஜூன் 28) மாவட்ட கழக செயலாளர்கள், பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பு அணி செயலாளர்கள் தொகுதி பார்வையாளர்கள் ஆகியோருடனான காணொலிக் கூட்டம் நடைபெற்றது.

### முனைப்புடன் செயலாற்ற...

ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைப்பதில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் தங்களை இணைத்துக் கொண்டு, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும், கழக அரசின் சாதனைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதிலும், 2026-ல் மீண்டும் கழக ஆட்சியை அமைப்பதிலும் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என உங்களில் ஒருவன் என்ற முறையில் அன்பு கலந்த உரிமையுடன் வலியுறுத்துகிறேன்.

தொண்டர்களையும் பொதுமக்களையும் அரவணைக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் பாதை தெளிவானது. பயணம் உறுதி மிக்கது.

இடையூறுகள் அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது. பெருமைமிக்க கழகத்தின் உடன்பிறப்பே வா. உன்னால் உருவாகும் ஓரணியில் தமிழ்நாடு.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடிக்கு தர்ம சக்ரவர்த்தி பட்டம்

புதுடெல்லி, ஜூன் 29-

சமண துறவி ஆச்சார்யா ஸ்ரீ 108 வித்யானந்த் ஜி மகாராஜின் நூற்றாண்டு விழாவில் பிரதமர் நரேந்திர மோடிக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம் வழங்கப்பட்டது.



டெல்லியில் உள்ள பகவான் மகாவீர் அஹிம்சா பாரதி அறக்கட்டளையுடன் இணைந்து மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்த சமண துறவி ஆச்சார்யாஸ்ரீ 108 வித்யானந்த் ஜி மகாராஜின் நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமர் மோடிக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் பேசிய பிரதமர் மோடி, "இந்த சந்தர்ப்பத்தில், நீங்கள் எனக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம் வழங்கி கவுரவித்தீர்கள். நான் இதற்கு தகுதியானவன் என்று கருதவில்லை. ஆனால், துறவிகளிடமிருந்து நாம் எதைப் பெற்றாலும், அதை 'பிரசாதமாக' ஏற்றுக்கொள்வது நமது கலாச்சாரம். எனவே, இந்த 'பிரசாதத்தை' நான் பணிவுடன் ஏற்றுக்கொண்டு, அதை மா பாரதிக்கு அர்ப்பணிக்கிறேன் என்று பிரதமர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், இந்த நாள் சிறப்பு வாய்ந்தது, ஏனெனில் 1987-ம் ஆண்டு ஜூன் 28 அன்று, ஆச்சார்யா வித்யானந்த் முனிராஜ் 'ஆச்சார்யா' என்ற பட்டத்தைப் பெற்றார். இது ஒரு மரியாதை மட்டுமல்ல, சமண கலாச்சாரத்தை கருத்துகள், கட்டுப்பாடு மற்றும் இரக்கத்துடன் இணைக்கும் ஒரு 'பவித்ர தாரா 'வும் கூட. நேற்று நாம் அவரது 100-வது பிறந்தநாளைக் கொண்டாடும்போது, இது அந்த வரலாற்று தருணத்தை நமக்கு நினைவூட்டு கிறது. இந்த சந்த ர்ப்பத்தில், ஆச்சார்யா ஸ்ரீமுனிராஜியின் ஆசிர்வாதம் எப்போதும் நம்முடன் இருக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

இந்தியா உலகின் பழமையான உயிர்ப்பான கலாச்சாரத்தை கொண்டது. நமது கருத்துகள் அழியாதவை, நமது எண்ணங்கள் அழியாதவை, நமது தத்துவம் அழியாதவை என்பதால் நாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அழியாதவர்களாக இருக்கிறோம். இந்த தத்துவத்தின் ஆதாரம் நமது முனிவர்கள், துறவிகள் மற்றும் ஆச்சார்யர்கள் ஆவர்" என்றார். இந்த விழாவில் பிரதமர் மோடி, மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்துடன் இணைந்து, ஆச்சார்யாவின் நினைவாக நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டார்.

### '2047-ல் இந்தியா அனைத்து துறைகளிலும்

# முதலிடம் பெற இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும்: அமித்ஷா

காந்திநகர், ஜூன் 29-

குஜராத் மாநிலம் பஞ்சமகால் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ கோவிந்த் குரு பல்கலைக்கழகத்தில் ரூ.125 கோடி மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகளின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா காணொலி வாயிலாக கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது;-

ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு எதிராக போராடிய கோவிந்த் குரு, இந்தியாவின் சுதந்திர இயக்க வரலாற்று வீரர்களில் ஒருவராவார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் சுமார் 1,512 பழங்குடி சகோதர, சகோதரிகள் உயிர் தியாகம் செய்தனர். மேலும் குஜராத்தில் உள்ள மங்காத், இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய இடமாக மாறியது. பிரதமர் நரேந்திர மோடி கோவிந்த் குருவின் வீரத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளார். மேலும் 2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை ஒரு சிறந்த தேசமாக மாற்ற உறுதிபூண்டுள்ளார். இது நம் அனைவருக்கும் முக்கியமான விஷயம். நாடு சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்போது, உலகின் அனைத்துத் துறைகளிலும் இந்தியா முதலிடம் பெற வேண்டும் என்ற உறுதிமொழியை நமது இளைஞர்களும், குழந்தைகளும் எடுக்க வேண்டும். இவ்வாறு அமித்ஷா தெரிவித்தார்.

# சென்னையில் நாளை 140 மின்சார பேருந்து சேவையை முதல்வர் தொடங்கி வைக்கிறார்

சென்னை, ஜூன் 29-

சென்னையில் 140 மின்சார பேருந்துகளை நாளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார் என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:- நாளை சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பாக 140 மின்சார பேருந்துகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

சென்னை மாநகரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தொடக்கமாக மின் பேருந்துகள் இயக்கம் அமையும். டீசல் பேருந்துகளால் ஏற்படும் காற்று மாசுகளை தவிர்க்க, இது ஒரு நல்வாய்ப்பாக அமையும்.

காற்று மாசு காரணமாக டெல்லி போன்ற மாநிலங்களில் ஏற்படும் போக்குவரத்து பாதிப்புகளை பல காலமாக பார்த்து வருகிறோம். உலக அளவில் மிகப்பெரிய முன்னெடுப்பாக எடுக்கப்படுகின்ற காற்று மாசு மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற முயற்சிக்கான மாற்றமாக இந்த திட்டம் அமையும். பேருந்துகளின் கொள்முதல் விலை கூடுதலாக இருந்தாலும் பயன்பாட்டுச் செலவு குறைவாகத்தான் இருக்கும்.

எனவே பயண கட்டணங்களில் எந்தவித மாற்றமும் இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.



திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கையொட்டி பக்தர்கள் வசதிக்காக ஏற்பாட்டு செய்யப்பட்டு வரும் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், கனிமொழி எம்.பி. ஆகியோர் நேற்று நேரில் ஆய்வு செய்தனர்.



மதுரை கோவில்பாப்பாக்குடி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் இருந்து மேற்கு ஊராட்சிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குப்பைகளை ஏற்றி அகற்றும் வாகனத்தை பயன்பாட்டுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் கலெக்டர் கே.ஜே.பிரவீன்குமார் உடனிருந்தார்.




மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் தேர்தல் பணிகள் மற்றும் கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து தெப்பக்குளம் அருகே தனியார் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் தேர்தல் பொறுப்பாளர் ஆனிமுத்து மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.